भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, गुरूवार, 9, जून 1994/1916 शाका

New Delhi, Thursday, 9th June, 1994/1916 Saga

*புது தில்லி, 1994, ஜூன் 9, வியாழக்கிழமை/1916 சக*


**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**

*(சட்டமியற்றுத் துறை)*

*புது தில்லி*

The translation in Tamil of the Judges (Protection) Act, 1985 (59 of 1985), The Indian Partnership Act, 1932 (9 of 1932), The Government Savings Bank Act, 1873 (5 of 1873), The Sale of Goods Act, 1930 (3 of 1930), The Public Provident Fund Act, 1968 (23 of 1968) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*நீதிபதிகள் (காப்பளிப்புச்) சட்டம், 1985 (59/1985), இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932 (9/1932), அரசாங்கச் சேமிப்பு வங்கிகள் சட்டம், 1873 (5/1873), சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930 (3/1930), பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதியச் சட்டம், 1968 (23/1968) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[ Price Rs. 30-00

# இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932

(சட்ட எண் 9/1932)

[1932, ஏப்ரல் 8]

கூட்டாண்மை தொடர்பான சட்டத்தை வரையறை செய்வதற்கும் திருத்தம் செய்வதற்குமான சட்டம்.

கூட்டாண்மை தொடர்பான சட்டத்தை வரையறை செய்வதும், திருத்தம் செய்வதும் உகந்தது என்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது :—

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932 என வழங்கப்பெறும்.

(2) இது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது, பிரிவு 69 நீங்கலாக, 1932ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளன்று செல்லாற்றல் பெறும்; பிரிவு 69 ஆனது, 1933ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளன்று செல்லாற்றல் பெறும்.

பொருள்வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் பொருள் குறித்து அல்லது தறுவாய் குறித்து முரணாக எதுவும் இருந்தாலன்றி—

(அ) ஒரு "நிறுவத்தின் செயல்" என்பது, அந்த நிறுவத்தால் அல்லது அந்த நிறுவத்திற்கு எதிராகச் செல்லுறுத்தத்தக்க ஓர் உரிமையை விளைவிப்பதாய் உள்ள, அந்த நிறுவத்தின் கூட்டாளி அல்லது முகவர் ஒருவரின் செயல் அல்லது செய்யாது விடுகை எதுவும் என்று பொருள்படும்;

(ஆ) "தொழில்" என்பது, வணிகத்தொழில், வாழ்தொழில் மற்றும் விழைதொழில் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்;

(இ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஈ) ஒரு நிறுவம் அல்லது அதன் கூட்டாளி ஒருவரைப் பொறுத்த-வரை "மூன்றாம் தரப்பினர்" என்பது, அந்த நிறுவத்தில் ஒரு கூட்டாளியாக இல்லாத ஒருவர் என்று பொருள்படும்; மற்றும்

(உ) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, ஆனால், பொருள் வரையறை செய்யப்படாத சொற்றொடர்கள் இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872இல் பொருள்வரையறை செய்யப் 9/1872 பட்டுள்ளபடி அச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள்களைக் கொண்டவையாக இருக்கும்.

9/1872ம் சட்டத்தின் வகையங்கள் பொருந்துறுதல்.

3. இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872இல் நீக்கறவு செய்யப்படாத வகையங்கள், அவை இந்தச் சட்டத்தின் தெரிநிலையான வகையங்களுக்கு முரணாக இல்லாதிருக்கும் அளவுக்கு, நிறுவங்களுக்குத் தொடர்ந்து பொருந்துறும்.

## அத்தியாயம் II

### கூட்டாண்மையின் தன்மை

4. " கூட்டாண்மை " என்பது, ஒரு தொழிலில் உள்ள அனைவராலும், அல்லது அனைவருக்குமாகச் செயலுறுகின்றவர்களில் எவராலும், நடத்தப்பட்டு அதன் ஆதாயங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்கு உடன்பட்டிருக்கிறவர்களுக் கிடையே எழுகின்ற தொடர்புநிலையாகும். " கூட்டாண்மை", " கூட்டாளி", " நிறுவம்", " நிறுவப் பெயர்" ஆகியவற்றின் பொருள் வரையறை.

கூட்டாண்மையில் சேர்ந்திருப்போர் தனிப்பட " கூட்டாளிகள் " எனவும், கூட்டாக " ஒரு நிறுவம் " எனவும், வழங்கப்பெறுவர், மேலும் எந்தப் பெயரில் அவர்களுடைய தொழில் நடத்தப்படுகிறதோ அந்தப் பெயர் " நிறுவப் பெயர் " என வழங்கப்படும்.

5. கூட்டாண்மைத் தொடர்புநிலை என்பது, ஒப்பந்தத்தால் எழுவதே தவிர, சமுதாய உறவுநிலையால் எழுவது அன்று. மேலும், குறிப்பாக, ஒரு குடும்பத் தொழிலை நடத்தி வருகிற பிரிவினையாகாத ஓர் இந்துக் குடும்பத்தின் உறுப்பினர்கள், அத்தகைய உறுப்பினர்கள் என்கிற முறையில், அல்லது ஒரு தொழிலை நடத்தி வருகிற பர்மீய பௌத்த கணவனும் மனைவியும், அத்தகைய கணவன் மனைவி என்கிற முறையில், அந்தத் தொழிலில் கூட்டாளிகள் அல்லர். கூட்டாண்மை என்பது சமுதாய உறவு நிலையால் எழுவது அன்று.

6. நபர்களின் இடையேயுள்ள இணைப்பு எதுவும் நிறுவமாகுமா, ஆகாதா என்பதைப் பற்றியோ நபர் ஒருவர் நிறுவம் ஒன்றில் கூட்டாளியா, இல்லையா என்பதைப் பற்றியோ தீர்மானிக்கையில், தொடர்புடைய பொருண்மைகள் அனைத்தும் ஒருசேரக் குறிப்பிட்டுக் காட்டுகிறவாறு, தரப்பினர்களுக்கு இடையேயுள்ள உண்மையான தொடர்புறவைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். கூட்டாண்மை உள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் முறை.

**விளக்கம் 1.**—ஒரு சொத்தின் மீது இணைவான உரித்தம் அல்லது பொதுவான உரித்தம் கொண்டுள்ள நபர்கள் அச்சொத்திலிருந்து கிடைக்கிற ஆதாயங்களை அல்லது மொத்த வருமானங்களைப் பங்கிட்டுக் கொள்வதால் மட்டுமே, அவர்கள் கூட்டாளிகள் ஆவதில்லை.

**விளக்கம் 2.**—ஒரு தொழிலின் ஆதாயங்களில் ஒரு பங்கினையோ ஆதாயங்கள் ஈட்டப்படுவதைப் பொறுத்து அல்லது தொழிலில் ஈட்டப்படும் ஆதாயங்களுக்கு ஏற்ப வேறுபடுகிற பணச் செலுத்தத்தையோ நபர் ஒருவர் பெறுவதால் மட்டுமே, அவர், அந்தத் தொழிலை நடத்திவருகிற நபர்களுடன் சேர்ந்த ஒரு கூட்டாளியாக ஆவதில்லை.

மேலும் குறிப்பாக, அத்தகைய பங்கு அல்லது செலுத்தம் எதுவும்,—

(அ) தொழில் எதிலும் ஈடுபட்டிருக்கிற அல்லது ஈடுபடவிருக்கிற நபர்களுக்குப் பணம் கடன் கொடுக்கிற ஒருவரால்,

(ஆ) ஊதியமாக, பணியாளரால் அல்லது முகவரால்,

(இ) ஆண்டுத் தொகையாக, இறந்துபோன ஒரு கூட்டாளியின் விதவையால் அல்லது குழந்தையால், அல்லது

(ஈ) வணிக நற்பெயரின் அல்லது அதன் பங்கின் விற்பனைக்கு மறுபயனாக அந்தத் தொழிலின் முந்தைய சொந்தக்காரர் அல்லது அதன் பகுதியின் சொந்தக்காரரால்

பெறப்படுவதால் மட்டுமே, அவ்வாறு பெறுபவர் அந்தத் தொழிலை நடத்தி வருகிற நபர்களுடன் சேர்ந்த ஒரு கூட்டாளியாக ஆவதில்லை.

7. கூட்டாளிகளிடையேயான ஒப்பந்தத்தில், அவர்களின் கூட்டாண்மை நீடிக்கும் காலம் பற்றியோ அவர்களுடைய கூட்டாண்மையின் முடிவுறுத்தம் பற்றியோ வகையம் எதுவும் இல்லாதவிடத்து, அந்தக் கூட்டாண்மை ஒரு " விருப்புக் கூட்டாண்மை " ஆகும். விருப்புக் கூட்டாண்மை.

8. குறிப்பிட்ட தொழில்துணிவுகளுக்கு மட்டுமோ தொழிலேற்புகளுக்கு மட்டுமோ, நபர் ஒருவர் மற்றொருவருடன் கூட்டாளியாக ஆகலாம். குறிப்பிட்டவகைக் கூட்டாண்மை.

## அத்தியாயம் III

### கூட்டாளிகளுள் ஒருவருக்கொருவரிடையே உள்ள தொடர்புறவுகள்

கூட்டாளிகளின் பொதுவான கடமைகள்.

9. கூட்டாளிகள், நிறுவத்தின் தொழிலை, அதன் பொதுவான நலப்பயனை மிகுவிக்கும் வகையில் நடத்திவரவும், ஒருவருக்கொருவர் நேர்மையுடனும், நம்பிக்கையுடனும் இருந்துவரவும், உண்மையான கணக்குகளையும் நிறுவத்தைப் பாதிக்கிற அனைத்தின் முழு விவரங்களையும் கூட்டாளி எவருக்கும் அல்லது அவருடைய சட்டமுறையான சார்பாற்றுநர் எவருக்கும் அளிக்கவும் கடமைப்பட்டவர் ஆவர்.

மோசடியால் ஏற்பட்ட இழப்பை ஈட்டுறுதி செய்வதற்கான கடமை.

10. ஒவ்வொரு கூட்டாளியும், நிறுவத்தின் தொழிலை நடத்துகையில் தாம் செய்த மோசடியால் அந்த நிறுவத்திற்கு விளையும் இழப்பு எதனையும் அந்நிறுவத்திற்கு ஈட்டுறுதி செய்தல் வேண்டும்.

கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தால் கூட்டாளிகளின் உரிமைகளையும் கடமைகளையும் தீர்மானித்தல்.

11. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குட்பட்டு, ஒரு நிறுவத்தின் கூட்டாளிகள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உரிமைகளும் கடமைகளும், அவர்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்கப்படலாம். மேலும், அந்த ஒப்பந்தம் தெரிநிலையானதாகவோ தொழில்நடத்துமுறையில் உட்கிடையானதாகவோ இருக்கலாம்.

அந்த ஒப்பந்தம், கூட்டாளிகள் அனைவருடைய இசைவினாலும் மாறுதல் செய்யப்படலாம்; மேலும், அந்த இசைவு தெரிநிலையானதாகவோ தொழில் நடத்துமுறையில் உட்கிடையானதாகவோ இருக்கலாம்.

வணிகத்தைக் கட்டுப்படுத்தும் உடன்பாடுகள்.

(2) இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872இன் பிரிவு 27இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய ஒப்பந்தங்களில் கூட்டாளி ஒருவர், தான் கூட்டாளியாக இருக்கும்போது, அந்த நிறுவத்தினது அல்லாத பிற தொழில் எதனையும் நடத்துதல் ஆகாது என வகைசெய்யப்படலாம். 9/1872

தொழில் நடத்தும் முறை.

12. கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்குட்பட்டு—

(அ) தொழில் நடத்துவதில் ஒவ்வொரு கூட்டாளியும் பங்கு கொள்ள உரிமையுடையவர் ஆவார் ;

(ஆ) தொழில் நடத்துவதில் ஒவ்வொரு கூட்டாளியும் தம்முடைய கடமைகளை விழிப்புணர்வுடன் ஆற்றுவதற்குக் கடமைப்பட்டவர் ஆவார் ;

(இ) தொழில் தொடர்பாக வழக்கமான பொருட்பாடுகள் குறித்து எழுகிற கருத்து வேறுபாடு எதுவும், கூட்டாளிகளில் பெரும்பான்மையினரால் முடிவு செய்யப்படும்; மேலும், அந்தப் பொருட்பாடு முடிவு செய்யப்படுவதற்கு முன்பு, கூட்டாளி ஒவ்வொருவரும் தம் கருத்தை வெளியிடுவதற்கு உரிமையுடையவர் ஆவார்; ஆனால், கூட்டாளிகள் அனைவரின் இசைவுமின்றி தொழிலின் அடிப்படைத் தன்மையில் மாற்றம் எதுவும் செய்யப்படுதலாகாது; மற்றும்

(ஈ) நிறுவத்தின் குறிப்பேடுகளில் எதனையும் கைவரப்பெறுவதற்கும் பார்வையிடுவதற்கும் அதிலிருந்து படியெடுப்பதற்கும் ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையுடையவர் ஆவார்.

ஒருவருக்கொருவரிடையேயான உரிமைகளும் பொறுப்படைவுகளும்.

13. கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்குட்பட்டு—

(அ) கூட்டாளி எவரும் தொழில் நடத்துவதில் பங்குகொள்வதற்கென பணியூதியம் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆகார் ;

(ஆ) நிறுவத்தால ஈட்டப்பட்ட ஆதாயங்களைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதற்குக் கூட்டாளிகள் உரிமைகொண்டவர் ஆவர், மேலும், அந்நிறுவத்திற்கு ஏற்பட்ட இழப்புகளிலும் அவர்கள் சமமாகப் பங்கு கொள்ளுதல் வேண்டும் ;

(இ) ஒரு கூட்டாளி, தம்மால் கொடுக்கப்பட்ட மூலதனத்தின்மீது வட்டி பெறுவதற்கு உரிமை கொண்டவராக இருக்குமிடத்து ஆதாயங்களிலிருந்து மட்டுமே அந்த வட்டி செலுத்தப்படுவதாகும்;

(ஈ) தொழிலின் நோக்கங்களுக்காக, தான் கொடுப்பதற்கு உடன் பட்டுள்ள மூலதனத்தொகைக்கும் மிகுதியாகச் செலுத்தப் படும் தொகை அல்லது முன்பணமாகச் செலுத்தப்படும் தொகை எதனையும் கொடுக்கிற கூட்டாளி ஒருவர், அந்தத் தொகையின் மீது ஆண்டு ஒன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு வட்டி பெறு வதற்கு உரிமை கொண்டவர் ஆவார் ;

(உ) நிறுவம்—

(i) வழக்கமாகவும் உரிய முறையிலும் தொழிலை நடத்திவரும் போதும்,

(ii) நெருக்கடி நிலையில், நிறுவத்தை இழப்பிலிருந்து பாது காக்கும் நோக்கத்திற்காக, அதேபோன்ற சூழ்நிலைகளில் இயல்பான அறிவுடைய ஒருவர், தம்மைப் பொறுத்து என்ன செய்து கொள்வாரோ அத்தகைய செயலைச் செய்யும் போதும்

கூட்டாளி ஒருவரால் செலுத்தப்பட்ட தொகையையும் அவருக்கு உற்ற பொறுப்படைவுகளையும் பொறுத்து அவருக்கு ஈட்டுறுதி செய்தல் வேண்டும்; மற்றும்

(ஊ) கூட்டாளி ஒருவர் நிறுவத்தின் தொழிலை நடத்துகையில் வேண்டுமென்றே கவனக்குறைவாக இருந்ததால் அதற்கு விளைந்த இழப்பு எதற்கும் அவர் அந்த நிறுவத்திற்கு ஈட்டுறுதி செய்தல் வேண்டும்.

நிறுவனத்தின் சொத்து

14. கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்கு உட்பட்டு, நிறுவத்தின் சொத்து என்பதில் நிறுவத்தின் பங்கு மூலத்திற்கு முதற்கண் கொண்டு சேர்க்கப்பட்ட அல்லது அந்நிறுவத்தின் நோக்கங்களுக்காக தொழில் நடை முறையின்போது வாங்குவதன் மூலமாகவோ பிறவாறாகவோ அந்நிறுவத் தால் அல்லது அந்நிறுவத்திற்காகப் பெறப்பட்ட சொத்தின் மீதான உரிமை களும் நலன்களும் அனைத்துச் சொத்துக்களும் அடங்கும்; மேலும், வணிக நற்பெயரும்கூட அதில் அடங்கும்.

மாறான கருத்து எதுவும் தோன்றினாலன்றி, நிறுவத்தின் பணத்திலிருந்து பெறப்பட்ட சொத்தின் மீதான உரிமைகளும், நலன்களும், சொத்துக்களும் அந்த நிறுவத்திற்காகப் பெறப்பட்டவையாகவே கொள்ளப்படும்.

நிறுவனத்தின் சொத்தினைப் பயன்படுத்துதல்.

15. கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்குட்பட்டு, நிறுவத்தின் சொத்தினைக் கூட்டாளிகள் தொழில் நோக்கங்களுக்காக மட்டுமே வைத்துப் பயன்படுத்த வேண்டும்.

கூட்டாளிகள் தனிப்பட்ட முறையில் மட்டும் ஆதாயங்கள்.

16. கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்குட்பட்டு,—

(அ) கூட்டாளி ஒருவர் நிறுவத்தின் தொழில் நடவடிக்கை ஏதிலிருந்தும் அல்லது அந்நிறுவத்தின் சொத்தினையோ அதன் தொழில் தொடர்பினையோ நிறுவப் பெயரினையோ பயன்படுத்துவ திலிருந்து தமக்கென ஆதாயம் எதனையும் பெறுவாராயின், அவர், அந்த ஆதாயத்திற்குக் கணக்குக் காட்டுதலும், அதனை அந்த நிறுவத்திற்குச் செலுத்திவிடுதலும் வேண்டும் ;

(ஆ) கூட்டாளி ஒருவர் நிறுவத்தின் தொழில் தன்மையை ஒத்ததாகவும், அதனுடன் போட்டியிடுவதாகவும் உள்ள தொழில் எதனையும் நடத்தி வருவாராயின், அவர், அந்தத் தொழிலில் தாம் பெற்ற ஆதாயத்திற்குக் கணக்குக்காட்டவும், அதனை அந்நிறுவத்திற்குச் செலுத்திவிடுதலும் வேண்டும்.

*கூட்டாளிகளின் உரிமைகளும் கடமைகளும்.*

17. கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்குட்பட்டு,—

*நிறுவத்தில் மாறுதல் ஏற்பட்ட பின்பு.*

(அ) நிறுவத்தின் அமைப்பில் ஒரு மாறுதல் ஏற்படுமிடத்து, அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட நிறுவத்திலுள்ள கூட்டாளிகள் ஒருவருக்கொருவர் இடையேயாகும் உரிமைகளும் கடமைகளும், இயலுமளவு, அவை அந்த மாற்றத்தை ஒட்டி முன்பு இருந்தவை போன்றே, இருந்து வரும்.

*நிறுவத்தின் காலஅளவு கழிவுற்ற பின்பு.*

(ஆ) குறிப்பிட்ட ஒரு காலஅளவுக்கு அமைக்கப்பட்ட ஒரு நிறுவம் அந்தக் காலஅளவு கழிவுற்ற பின்பும், அதன் தொழிலைத் தொடர்ந்து நடத்தி வருகிறவிடத்து, கூட்டாளிகள் ஒருவருக்கொருவரிடையேயாகும் உரிமைகளும், கடமைகளும், அவை அந்தக் காலஅளவு கழிவுறுவதற்கு முன்பு இருந்தவை போன்றே, விருப்புக் கூட்டாண்மையின் சட்ட விளைவுகளுடன் ஒத்திருக்கும் அளவுக்கு அந்தக் காலஅளவு கழிவுற்றதன் பின்பும் தொடர்ந்து இருந்துவரும்; மற்றும்

*கூடுதலான தொழிலேற்புகளை மேற்கொள்கிறவிடத்து.*

(இ) ஒன்று அல்லது மேற்பட்ட தொழில் துணிவுகளை அல்லது தொழிலேற்புகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு நிறுவம், தொழில் துணிவுகளையோ பிற தொழிலேற்புகளையோ மேற்கொள்கிறவிடத்து, அத்தகைய பிற தொழில் துணிவுகளை அல்லது பிற தொழிலேற்புகளைப் பொறுத்து அந்தக் கூட்டாளிகள் ஒருவருக்கொருவரிடையேயாகும் உரிமைகளும் கடமைகளும் முன்னதாகவே இருந்த தொழில் துணிவுகளையும் தொழிலேற்புகளையும் பொறுத்த உரிமைகளையும் கடமைகளையும் போன்றே இருந்துவரும்.

## அத்தியாயம் IV

### மூன்றாம் தரப்பினர்களுடன் கூட்டாளிகளுக்கு உள்ள தொடர்புறவுகள்

*கூட்டாளி நிறுவத்தின் முகவராக இருத்தல்.*

18. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குட்பட்டு, கூட்டாளி ஒருவர் நிறுவத்தின் தொழிலைப் பொறுத்தவரை, அந்த நிறுவத்தின் முகவராக இருப்பார்.

*நிறுவத்தின் முகவர் என்ற முறையில் கூட்டாளிகளுக்குள்ள உட்கிடை அதிகாரம்.*

19. (1) பிரிவு 22 இன் வகையங்களுக்குட்பட்டு, நிறுவம் நடத்தி வரும் தொழிலைப் போன்ற ஒரு தொழிலை வழக்கமாக நடத்தும் முறையில் ஒரு கூட்டாளியால் செய்யப்பட்ட செயல் எதுவும் அந்த நிறுவத்தைக் கட்டுப்படுத்தும்.

நிறுவத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தப் பிரிவினால் கூட்டாளிக்கு வழங்கப்படும் அதிகாரம் அவருடைய ''உட்கிடை அதிகாரம்'' எனப்படும்.

(2) வணிக வழக்காறு அல்லது வழக்கம் எதுவும் மாறாக இல்லாதிருக்கையில், ஒரு கூட்டாளியின் உட்கிடை அதிகாரம் பின்வருபவை பொறுத்து அவருக்கு அதிகாரம் அளிப்பதில்லை :

(அ) நிறுவத்தின் தொழில் தொடர்பான பூசலைப் பொதுவர் தீர்வுக்கு அனுப்புதல்,

(ஆ) நிறுவத்தின் சார்பாக வங்கிக் கணக்கு ஒன்றைத் தமது சொந்தப் பெயரில் தொடங்குதல்,

(இ) நிறுவத்தின் கோருரிமை எதனையும் அல்லது கோருரிமையின் பகுதி எதனையும் ஒத்திசைவாகத் தீர்த்தல் அல்லது அதனைக் கைவிடுதல்,

(ஈ) நிறுவத்தின் சார்பாகத் தொடுக்கப்பட்ட உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதனையும் திரும்பப்பெறுதல்.

(உ) நிறுவத்திற்கு எதிரான உரிமைவழக்கு அல்லது நடவடிக்கையில் பொறுப்புடைவு எதனையும் ஒத்தேற்புசெய்தல்,

(ஊ) நிறுவத்தின் சார்பாக நிலையியல் சொத்தினை வாங்குதல்,

(எ) நிறுவத்திற்குச் சொந்தமான நிலையியல் சொத்தினை உரிமை மாற்றம் செய்தல்,

(ஏ) நிறுவத்தின் சார்பாகக் கூட்டாண்மை எதிலும் சேர்தல்.

20. ஒரு நிறுவத்திலுள்ள கூட்டாளிகள், தங்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் வாயிலாக, கூட்டாளி ஒருவரின் உட்கிடை அதிகாரத்தை விரிவாக்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம். கூட்டாளியின் உட்கிடை அதிகாரத்தை விரிவாக்குதலும் கட்டுப்படுத்துதலும்

அத்தகைய கட்டுப்பாடு எதுவும் இருந்தபோதிலும், நிறுவத்திற்காகக் கூட்டாளி ஒருவர், செய்யும் செயல் எதுவும் அவரது உட்கிடை அதிகாரத்திற்குள் வருமாயின், அத்தகைய செயல், எந்த நபருடன் அவர் நடவடிக்கையில் ஈடுபடுகிறாரோ, அந்த நபர், அந்தக் கட்டுப்பாட்டைப் பற்றித் தெரிந்திருந்தாலோ, அல்லது அவர் கூட்டாளியாக இருப்பதைத் தெரியாமலோ அல்லது நம்பாமலோ இருந்தாலன்றி, அந்நிறுவத்தைக் கட்டுப்படுத்தும்.

21. நெருக்கடி நிலையில் நிறுவத்தை இழப்பிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்திற்காக, அதே போன்ற சூழ்நிலைகளில் இயல்பான அறிவுடைய ஒருவர் தம்மைப் பொறுத்து என்ன செய்து கொள்வாரோ, அத்தகைய செயலைச் செய்வதற்கு, கூட்டாளி ஒருவர், அதிகாரம் உடையவர் ஆவார். மேலும், அத்தகைய செயல்கள் அந்த நிறுவத்தைக் கட்டுப்படுத்தும். நெருக்கடி நிலையில் கூட்டாளிக்குள்ள அதிகாரம்.

22. ஒரு நிறுவத்தின் சார்பாக ஒரு கூட்டாளியினாலோ பிற நபராலோ புரியப்படும் செயல் அல்லது எழுதிக் கொடுக்கப்படும் முறையாவணம் எதுவும், அந்நிறுவத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில், அந்நிறுவத்தின் பெயராலோ அந்நிறுவத்தைக் கட்டுப்படுத்தும் என்பதைத் தெரிநிலையாக அல்லது உட்கிடையாகக் காட்டுகிற வேறு எந்த முறையாலோ செய்யப்படுதல் அல்லது எழுதிக் கொடுக்கப்படுதல் வேண்டும். நிறுவத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் செயல்புரிவதற்கான முறை.

23. நிறுவத்தின் அலுவற்பாடுகளைப் பொறுத்து கூட்டாளி ஒருவர் செய்யும் ஏற்புரை அல்லது சாற்றுரை எதுவும் வழக்கமான தொழில் நடத்துமுறையில் செய்யப்பட்டிருப்பின், அது அந்நிறுவத்திற்கெதிரான சான்றாக அமையும். கூட்டாளி செய்யும் ஏற்புரையால் எழும் விளைவு.

24. நிறுவத்தின் அலுவற்பாடுகள் தொடர்பான பொருட்பாடு எதனையும் பொறுத்து அந்நிறுவத்தின் தொழிலில் வழக்கமாகச் செயலுறுகின்ற கூட்டாளி ஒருவருக்குக் கொடுக்கப்படும் அறிவிப்பு, அந்தக் கூட்டாளியாலோ அவரது இசைவுடனோ, அந்நிறுவத்திற்கு மோசடி இழைக்கப்படும் நேர்வில் தவிர, அந்நிறுவத்திற்கான அறிவிப்பு ஆகும். செயலுறு கூட்டாளிகளுக்குக் கொடுக்கப்படும் அறிவிப்பின் விளைவு.

25. நிறுவத்தின் கூட்டாளி ஒவ்வொருவரும், தாம் ஒரு கூட்டாளியாக இருக்கிறபோது, புரியப்பட்ட நிறுவத்தின் செயல்கள் அனைத்திற்கும், மற்ற கூட்டாளிகள் அனைவருடனும் சேர்ந்து கூட்டாகவும் தனித் தனியாகவும் பொறுப்படைவு உடையவர் ஆகிறார். நிறுவத்தின் செயல்களைப் பொறுத்து கூட்டாளியின் பொறுப்படைவு.

26. நிறுவத்தின் வழக்கமான தொழில் நடத்து முறையிலோ கூட்டாளிகள் அளித்த அதிகாரத்துடனோ செயலுறுகிற கூட்டாளி ஒருவரின் முறையற்ற செயலால் அல்லது செய்யாது விடுகையால் மூன்றாமவர் எவருக்கும் இழப்பு அல்லது ஊறு விளையுமிடத்து அல்லது தண்டம் எதுவும் உற்றவிடத்து, அதற்காக அந்தக் கூட்டாளிக்கு ஏற்படும் பொறுப்படைவின் அளவுக்கு அந்நிறுவமும் பொறுப்படைவுக்கு உற்றதாகிறது. கூட்டாளி ஒருவரின் முறையற்ற செயல்கள் பொறுத்து பொறுப்படைவு.

மூன்றாம் தரப்பினரிடமிருந்து பொருள்களைக் கூட்டாளிகள் தவறாகப் பயன்படுத்துவதனால் நிறுவத்திற்கு ஏற்படும் பொறுப்படைவு.

27. (அ) தமக்குள்ள வெளிப்படையான அதிகாரத்திற்குள் செயலுறுகிற கூட்டாளி ஒருவர் மூன்றாம் தரப்பினர் ஒருவரிடமிருந்து பணத்தொகையினையோ சொத்தினையோ பெற்று, அதனைத் தவறாகப் பயன்படுத்துமிடத்து, அல்லது

(ஆ) ஒரு நிறுவம், வழக்கமான தொழில்நடத்துமுறையின் மூன்றாம் தரப்பினர் ஒருவரிடமிருந்து பணத் தொகையினையோ சொத்தினையோ பெற்று, அந்தப் பணத்தொகை அல்லது சொத்து அந்நிறுவத்தின் கையடைவில் இருக்கிறபோது கூட்டாளிகளில் எவர் ஒருவரும் அதனைத் தவறாகப் பயன்படுத்துமிடத்து

அதனால் ஏற்படும் இழப்பினை ஈடுசெய்வதற்கு அந்நிறுவம் பொறுப்படைவுக்கு உற்றதாகிறது.

அதிகாரம் உள்ளவராகக் காட்டிக் கொள்ளல்.

28. (1) நிறுவம் ஒன்றில் தாம் ஒரு கூட்டாளியாக இருப்பதாக வாய்மொழி அல்லது எழுத்து மூலமாகவோ நடத்தை மூலமாகவோ கூறிக்கொள்கிற அல்லது அவ்வாறு கூறப்படுவதாகத் தெரிந்தும் அதனை அனுமதிக்கிற ஒருவர், அத்தகைய கூற்றில் நம்பிக்கை கொண்டதன்மேல் அந்நிறுவத்திற்குக் கடன் கொடுத்த எவரொருவருக்கும், அந்நிறுவத்தின் கூட்டாளி என்கிற முறையில் பொறுப்படைவு உடையவர் ஆகிறார்; நிறுவத்திற்கு அவ்வாறு கடன் கொடுத்தவருக்கு அக்கூற்று எட்டியதா என்பது பொறுப்படைவு உடையவருக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

(2) கூட்டாளி ஒருவரின் இறப்பிற்குப் பின்பு நிறுவத்தின் தொழில் அந்நிறுவத்தின் பழைய பெயரிலேயே தொடர்ந்து இருந்துவருமிடத்து, அந்தப் பெயரே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது அல்லது இறந்து போன கூட்டாளியின் பெயரே அதன் பகுதியாகத் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது என்பதால் மட்டுமே, அவருடைய இறப்பிற்குப் பின்னர் அந்நிறுவத்தால் புரியப்பட்ட செயல் எதனைப் பொறுத்தும், அவருடைய சட்ட முறையான சார்பற்றுநரோ அவருடைய சொத்தோ பொறுப்படைவாக ஆவதில்லை.

கூட்டாளியின் உரித்தத்தை உரிமைமாற்றம் பெற்றவருக்குள்ள உரிமைகள்.

29. (1) கூட்டாளி ஒருவர் நிறுவத்தில் தமக்குள்ள உரித்தத்தை முழுமையாகவோ அடைமானம் வாயிலாகவோ அத்தகைய உரித்தத்தின் மீது அவர் பொறுப்புரிமை ஏற்படுத்துவதன் வாயிலாகவோ உரிமைமாற்றம் செய்வதால், உரிமைமாற்றம் பெறுநர், அந்நிறுவம் தொடர்ந்து இருந்துவரும்போது, அதன் தொழில் நடத்துமுறையில் குறுக்கிடவோ கணக்குகளைக் கோரவோ தொழிலேடுகளைப் பார்வையிடவோ உரிமை பெறுவதில்லை ; ஆனால், உரிமைமாற்றம் செய்த கூட்டாளிக்கு ஆதாயத்தில் கிடைக்கும் பங்கினைப் பெறுவதற்கு மட்டுமே அவருக்கு உரிமை உண்டு ; கூட்டாளிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆதாயங்களுக்கான கணக்கினை அவர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(2) அந்நிறுவம் கலைக்கப்படுமாயின் அல்லது உரிமைமாற்றம் செய்த கூட்டாளி ஒரு கூட்டாளியாக இருப்பது அற்றுப்போகுமாயின், உரிமைமாற்றம் பெறுநர், அவ்வாறு உரிமைமாற்றம் செய்த கூட்டாளிக்கு அந்நிறுவத்திலுள்ள சொத்திருப்பிலிருந்து கிடைக்கும் பங்கினை, எஞ்சியுள்ள கூட்டாளிகளுடன் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆகிறார் ; அந்தப் பங்கினைக் கண்டறிவதன் பொருட்டு, அந்நிறுவத்தின் கலைப்புத் தேதி முதல் இருந்து வரும் கணக்குகளைப் பெறுவதற்கு அவர் உரிமைகொண்டவர் ஆகிறார்.

இளவர்கள் கூட்டாண்மையின் நலப்பயன்களைப் பெற அனுமதிக்கப்படுதல்.

30. (1) நபர் ஒருவர் தம்மைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின்படி இளவராயிருக்கும்போது, நிறுவத்தின் கூட்டாளியாக இல்லாதிருப்பினும், அப்போதைக்குக் கூட்டாளிகளாக இருக்கிற அனைவரின் இசைவுடனும், அவர் கூட்டாண்மையின் நலப்பயன்களைப் பெற அனுமதிக்கப்படலாம்.

(2) அத்தகைய இளவர், அந்நிறுவத்தின் சொத்தினையும் ஆதாயங்களையும் பொறுத்து உடன்படுகிற பங்கினைப் பெற உரிமை உடையவர் ஆவார். மேலும், அவர் அந்நிறுவத்தின் கணக்குகளில் எதனையும் கைவரச் செய்வதற்கும், பார்வையிடுவதற்கும், அதிலிருந்து படியெடுப்பதற்கும் உரிமை உடையவர் ஆகிறார்.

(3) இளவரின் பங்கு அந்நிறுவத்தின் செயல்களுக்கான பொறுப்படைவுக்கு உட்பட்டதாக இருக்கும்; ஆனால், அந்தச் செயலுக்கு இளவர் தம் சொத்த முறையில் பொறுப்படைவுக்கு உட்பட்டவர் அல்லர்.

(4) இளவர், அந்நிறுவத்துடன் தமக்குள்ள தொடர்பினைத் துண்டித்துக்கொள்ளும்போது தவிர, அந்நிறுவத்தின் சொத்தில் அல்லது ஆதாயங்களில் தமக்குள்ள பங்கிற்கான கணக்குகளையோ பணத்தொகையையோ கோரி, கூட்டாளிகளின் மீது வழக்குத் தொடரலாகாது; அவ்வாறு தொடர்பினைத் துண்டித்துக்கொள்ளும் நேர்வில், அவருடைய பங்குத் தொகை, பிரிவு 48 இல் அடங்கியுள்ள விதிகளுக்கு இயலுமளவு இணங்கியவாறு செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் :

வரம்புரையாக : அவ்வழக்கில் கூட்டாளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்தோ அல்லது பிற கூட்டாளிகளுக்கு அறிவிப்புக் கொடுத்தல் மீது நிறுவத்தைக் கலைக்க உரிமை கொண்டுள்ள கூட்டாளி ஒருவரோ அந்நிறுவத்தைக் கலைப்பதென தேர்வுசெய்து கொள்ளலாம்; அதன்மேல், அந்நிறுவத்தைக் கலைப்பதற்காகவும், கூட்டாளிகளிடையே கணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவும், நீதிமன்றம் அவ்வழக்கினை மேல்நடத்துதல் வேண்டும்; கூட்டாளிகளின் பங்குத் தொகைகளையும் தீர்மானிப்பதுடன் இளவரின் பங்குத் தொகையையும் தீர்மானித்தல் வேண்டும்.

(5) உரிமைவயதடைந்த பின்னர் அல்லது கூட்டாண்மையின் நலப்பயன்களைப் பெறுவதற்காகத் தாம் அனுமதிக்கப் பெற்றிருப்பதைத் தெரிந்து கொண்டதன் பின்னர், இவ்விரண்டில் எது பிந்தியதோ அதிலிருந்து ஆறு மாதங்களில் எச்சமயத்திலும், அந்நபர் அந்த நிறுவத்தில் ஒரு கூட்டாளியாக ஆவதெனவோ ஆவதில்லையெனவோ தேர்வு செய்து கொள்வதாகப் பொது அறிவிப்புக் கொடுக்கலாம்; மேலும், அந்நிறுவத்தைப் பொறுத்து அவருக்குள்ள நிலையை அத்தகைய அறிவிப்பு தீர்மானிக்கும் :

வரம்புரையாக : அவ்வாறு அறிவிப்பு கொடுக்க அவர் தவறுவாராயின், அந்த ஆறுமாதங்கள் கழிவுற்றதும் அந்நிறுவத்தில் அவர் ஒரு கூட்டாளியாக ஆகிவிடுவார்.

(6) இளவரான நபர் எவரும், ஒரு நிறுவத்தில் கூட்டாண்மை நலப்பயன்களைப் பெறுவதற்காக அனுமதிக்கப் பெற்றுள்ளவிடத்து, உரிமை வயதடைந்து ஆறு மாதங்கள் கழிவுற்றதன் பின்பு ஒரு குறிப்பிட்ட நாள் வரையில் அந்நபர் அவ்வாறு தாம் அனுமதிக்கப் பெற்றுள்ளதைத் தெரிந்துகொண்டிருக்கவில்லை என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு, அதனை உறுதியாகச் சொல்லும் நபர்களைச் சார்ந்ததாயிருக்கும்.

(7) அந்த நபர் ஒரு கூட்டாளியாக ஆகிறவிடத்து,—

(அ) இளவர் என்னும் முறையில் அவருக்குள்ள உரிமைகளும் பொறுப்படைவுகளும் அவர் ஒரு கூட்டாளியாக ஆகிற தேதி வரையில் தொடர்ந்து இருந்துவரும், ஆனால், அவர் கூட்டாண்மையின் நலப்பயன்களைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பெற்றதன் பின்னர், அந்நிறுவத்தால் செய்யப்பட்ட செயல்கள் அனைத்திற்கும் மூன்றாம் தரப்பினர்களுக்குத் தம் சொந்த முறையிலும் பொறுப்படைவு உடையவர் ஆவார்; மற்றும்

(ஆ) அவர் ஓர் இளவர் என்னும் முறையில் உரிமைகொண்டிருந்த பங்கு அந்த நிறுவத்தின் சொத்திலும், ஆதாயங்களிலும் அவருக்குள்ள பங்கு ஆகும்.

(8) அந்த நபர் ஒரு கூட்டாளியாக ஆவதில்லை எனத் தேர்வு செய்து கொள்ளுமிடத்து,—

(அ) அவருடைய உரிமைகளும் பொறுப்படைவுகளும் இந்தப் பிரிவின்படி இளவராக உள்ள ஒருவர் கொண்டிருந்திருப் பவையாகவே, அவர் பொது அறிவிப்பு கொடுக்கும் தேதி வரையில் தொடர்ந்து இருந்துவரும் ;

(ஆ) அறிவிப்புத் தேதிக்குப் பின்னர் நிறுவத்தால் செய்யப்பட்ட செயல்கள் எவற்றிற்கும் அவருடைய பங்கு பொறுப்படைவுக்கு உட்படுவதில்லை;

(இ) சொத்திலும் ஆதாயங்களிலும் அவருக்குள்ள பங்கினைப் பொறுத்து உட்பிரிவு (4)இக்கு இணங்கக் கூட்டாளிகளின் மீது வழக்குத் தொடர்வதற்கு அவர் உரிமை கொண்டவர் ஆவார்.

(9) உட்பிரிவுகள் (7), (8) ஆகியவற்றில் உள்ள எதுவும் பிரிவு 28இன் வகையங்களைப் பாதிப்பதில்லை.

## அத்தியாயம் V

### வந்து சேரும் மற்றும் விலகிப்போகும் கூட்டாளிகள்

கூட்டாளி ஒருவரைச் சேர்த்துக் கொள்ளுதல்.

31. (1) கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்கும் பிரிவு 30 இன் வகையங்களுக்கும் உட்பட்டு, நபர் எவரும் நிறுவத்தில் இருந்து வருகிற கூட்டாளி கள் அனைவருடைய இசைவுமின்றி, ஒரு கூட்டாளியாகச் சேர்த்துக்கொள்ளப் பெறுதல் ஆகாது.

(2) பிரிவு 30 இன் வகையங்களுக்கு உட்பட்டு நபர் ஒருவர் நிறுவம் ஒன்றில் ஒரு கூட்டாளியாகச் சேர்த்துக்கொள்ளப்பெற்றதாலேயே, அவர் ஒரு கூட்டாளியாக ஆவதற்கு முன்பு செய்யப்பட்ட அந்த நிறுவத்தின் செயல் எதனைப் பொறுத்தும் பொறுப்படைவுக்கு உட்படுவதில்லை.

கூட்டாளி ஒருவர் விலகிக் கொள்ளுதல்.

32. (1) கூட்டாளி ஒருவர் —

(அ) பிற கூட்டாளிகள் அனைவருடைய இசைவுடன்,

(ஆ) கூட்டாளிகளால் செய்துகொள்ளப்பட்ட தெரிநிலையான உடன் பாட்டிற்கு இணங்க, அல்லது

(இ) அந்தக் கூட்டாண்மை விருப்புநிலைக் கூட்டாண்மையாக இருக்கு மிடத்து, விலகிக்கொள்வதற்கான தம் கருத்தினைக் கொண்ட அறிவிப்பை எழுத்து மூலமாகப் பிற கூட்டாளிகள் அனைவருக் கும் கொடுப்பதன் வாயிலாக,

விலகிக்கொள்ளலாம்.

(2) விலகிக்கொள்கிற கூட்டாளி ஒருவர், தாம் விலகிக்கொள்வதற்கு முன்பு செய்யப்பட்ட அந்த நிறுவத்தின் செயல்களைப்பொறுத்து, மூன்றாம் தரப்பினர் எவருக்கும் தாம் உற்ற பொறுப்படைவு எதிலிருந்தும் அவர் அந்த மூன்றாம் தரப்பினருடனும் மாற்றியமைக்கப்பட்ட நிறுவத்தின் கூட்டாளிகளுடனும் செய்து கொண்ட ஓர் உடன்பாட்டின் வாயிலாக, விடுவிக்கப்படலாம்; மேலும், அவ்வாறு விலகிக்கொள்வதைப் பற்றி அந்த மூன்றாம் தரப்பினர் அறிந்த பின்பு அவருக்கும் மாற்றியமைக்கப்பட்ட நிறுவத்திற்கும் இடையிலான தொழில் நடத்து முறையிலிருந்து அத்தகைய உடன்பாடு உட்கிடையாக இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

(3) ஒரு நிறுவத்திலிருந்து கூட்டாளி ஒருவர் விலகிக்கொண்டபோதிலும் கூட்டாளிகளில் எவராலும் நிறுவத்தின் செயலாகச் செய்யப்பட்ட செயல் எதற்கும் அவரும், கூட்டாளிகளும், அந்த விலகுதலைப் பற்றிய பொது அறிவிப்புக் கொடுக் கும் வரையில், கூட்டாளிகளைப்போலவே மூன்றாம் தரப்பினர்களுக்குத் தொடர்ந்து பொறுப்படைவுக்கு உட்பட்டவர்கள் ஆவர் :

வரம்புரையாக : விலகிக்கொண்ட ஒரு கூட்டாளி, அவர் ஒரு கூட்டாளி யாக இருந்தார் என்பதைப் பற்றித் தெரியாமலேயே அந்த நிறுவத்துடன் தொழில் முறையில் தொடர்பு கொள்கிற மூன்றாம் தரப்பினர் எவருக்கும், பொறுப்படை வுக்கு உட்படுவதில்லை.

(4) உட்பிரிவு (3)இன்படியான அறிவிப்புகள் விலகிக்கொண்ட கூட்டாளியாலோ, மாற்றியமைக்கப்பட்ட நிறுவத்தின் கூட்டாளியாலோ கொடுக்கப்படலாம்.

33. (1) கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களை நல்லெண்ணத்துடன் செலுத்துவதன் மூலம் அல்லாமல் கூட்டாளிகளில் பெரும்பான்மையினரால், கூட்டாளி எவரும் நிறுவத்திலிருந்து வெளியேற்றப்படுதல் ஆகாது. கூட்டாளி ஒருவரை வெளியேற்றுதல்.

(2) பிரிவு 32 இன் உட்பிரிவுகள் (2), (3), (4) ஆகியவற்றின் வகையங்கள், விலகிக்கொண்ட கூட்டாளிக்குப் பொருந்துறுகிறவாறே வெளியேற்றப்பட்ட கூட்டாளிக்கும் பொருந்துறும்.

34. (1) ஒரு நிறுவத்தின் கூட்டாளி ஒருவர் நொடித்துப்போனவர் என்று நீதிமுறையில் தீர்மானிக்கப்பட்டிருக்குமிடத்து, அதன் காரணமாக அந்த நிறுவம் கலைக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்த நீதிமுறைக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட தேதியில், அவர் ஒரு கூட்டாளியாக இருப்பது அற்றுப்போகும். கூட்டாளி ஒருவரின் நொடிப்புநிலை.

(2) ஒரு கூட்டாளி நொடித்துப் போனவர் என நீதிமுறையில் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் கூட்டாளிகளுக்கு இடையேயான ஓர் ஒப்பந்தத்தின்படி அந்த நிறுவம் கலைக்கப்படாமல் இருக்குமிடத்து, அந்த நீதிமுறைக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் செய்யப்பட்ட அந்த நிறுவத்தின் செயல் எதற்கும், அவ்வாறு நீதிமுறையில் நொடிப்பு நிலையரென தீர்மானிக்கப்படுகிற கூட்டாளியின் சொத்து பொறுப்படைவுக்கு உட்படுவது இல்லை; மேலும், நொடித்துப்போனவரின் செயல் எதற்கும் அந்த நிறுவமும் பொறுப்படைவுக்கு உட்படுவது இல்லை.

35. கூட்டாளி ஒருவர் இறந்துவிட்டாலும் கூட்டாளிகளுக்கு இடையே ஓர் ஒப்பந்தத்தின்படி, அந்த நிறுவம் கலைக்கப்படாமல் இருக்குமிடத்து, அவருடைய இறப்புக்குப் பின்னர் செய்யப்பட்ட நிறுவத்தின் செயல் எதற்கும், இறந்துபோன கூட்டாளியின் சொத்து பொறுப்படைவுக்கு உட்படுவது இல்லை. இறந்துபோன கூட்டாளியினுடைய சொத்தின் பொறுப்படைவு.

36. (1) விலகிப்போகும் கூட்டாளி ஒருவர், நிறுவத்தின் தொழிலுக்குப் போட்டியாகத் தொழில் ஒன்றை நடத்தலாம்; மேலும், அவர் அந்தத் தொழிலை விளம்பரப்படுத்தலாம்; ஆனால், மாறாக ஒப்பந்தம் எதுவும் இருப்பின், அதற்கு உட்பட்டு, அவர்— போட்டியாகத் தொழில் நடத்துவதற்கு விலகிப்போகும் கூட்டாளிக்கு உள்ள உரிமைகள்.

(அ) நிறுவத்தின் பெயரைப் பயன்படுத்துதல் ஆகாது;

(ஆ) நிறுவத்தின் தொழிலைத் தாம் நடத்தி வருவதாகக் கூறிக் கொள்ளுதல் ஆகாது; அல்லது

(இ) அவர் கூட்டாளியாக இருப்பது அற்றுப்போவதற்கு முன்பு நிறுவத்துடன் தொழில் தொடர்பு கொண்டிருந்த நபர்களுடைய தொழிலாதரவை நாடுதல் ஆகாது.

(2) கூட்டாளி ஒருவர், தாம் கூட்டாளியாக இருப்பது அற்றுப்போவதன் மீது, குறிப்பிட்ட காலத்திற்குள் அல்லது குறிப்பிட்ட வட்டார எல்லைக்குள் நிறுவத்தின் தொழிலைப் போன்ற தொழில் எதனையும் நடத்துவதில்லை என்று தம் கூட்டாளிகளுடன் ஓர் உடன்பாடு செய்து கொள்ளலாம்; மேலும், இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இன் பிரிவு 27 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், விதிக்கப்படும் தடைகள் தகுமானவையாக இருக்குமாயின், அந்த உடன்பாடு செல்லுந்தன்மை உடையதாகும். வணிகத்தைத் தடை செய்யும் உடன்பாடுகள்.

9/1872

விலகிப்போகும் கூட்டாளி ஒருவர் குறித்தசில நேர்வுகளில் பிந்திய ஆதாயங்களில் பங்கு பெறுவதற்கு உள்ள உரிமை.

37. நிறுவத்தின் உறுப்பினர் எவரும் இறந்துவிட்டிருந்து அல்லது பிறவாறு ஒரு கூட்டாளியாக இருப்பது அற்றுப்போயிருந்து, எஞ்சியிருக்கிற அல்லது தொடர்ந்து இருந்துவருகிற கூட்டாளிகள் தங்களுக்கும்,விலகிப்போகும்கூட்டாளிக்கும் இடையில் அல்லது அவரது சொத்தினைப் பொறுத்து கணக்குகளை முடிவாகத் தீர்த்துக் கொள்ளாமலேயே நிறுவத்தின் தொழிலை நிறுவத்தின் சொத்தைக் கொண்டு நடத்திவருகிறவிடத்து, மாறான ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில், விலகிப்போகும் கூட்டாளி அவர் கூட்டாளியாக இருப்பது அற்றுப்போன பின்பு அந்த நிறுவத்தின் சொத்தில் அவருக்குள்ள பங்கு பயன்படுத்தப்பட்டதால் கிடைத்திருக்கும் ஆதாயப் பங்கினைப் பெறுவதற்கு அல்லது நிறுவத்தின் சொத்தில் அவருடைய பங்குத் தொகையின் மீது ஆண்டிற்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு வட்டி பெறுவதற்கு,அவரோ,அவர்தம் சார்பாற்றுநரோ தெரிவு செய்து கொள்வதன் மீது உரிமை கொண்டவர் ஆகிறார் அல்லது அவருடைய சொத்து உரிமைக்கு உற்றதாகிறது :

வரம்புரையாக : இறந்துபோன அல்லது விலகிப்போகும் கூட்டாளியின் உரித்தங்களை எஞ்சியிருக்கிற அல்லது தொடர்ந்து இருந்துவருகிற கூட்டாளிகள் விலைக்கு வாங்கிக்கொள்வதற்குக் கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் மூலம் அவர்களுக்கு விருப்பத்தேர்வு அளிக்கப்பட்டிருந்து, முறையாக அந்த விருப்பத்தேர்வு செய்யப்பட்டிருக்குமிடத்து, இறந்துபோன கூட்டாளியின் சொத்து அல்லது, நேர்வுக்கேற்ப, விலகிப்போகும் கூட்டாளி அல்லது அவரது சொத்து, ஆதாயங்களில் மேற்கொண்ட அல்லது பிறவகைப் பங்கிற்கு உரிமை கொண்டதாவது இல்லை; ஆனால், அந்த விருப்பத்தேர்வைச் செய்திருப்பதாக எண்ணிக்கொண்டு அதன் வரையுரைகளில் முக்கியக் கூறுகள் அனைத்திற்கும் இணங்கி நடக்கவில்லை எனில், அவர் இந்தப் பிரிவின் முன்சென்ற வகையங்களின்படி கணக்குக்காட்டும் பொறுப்படைவுக்கு உட்பட்டவர் ஆவார்.

நிறுவத்தில் ஏற்படும் மாற்றத்தால் தொடர் பொறுப்புறுதி முறித்தறிவு செய்யப்படுதல்.

38. ஒரு நிறுவத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக வேறொரு நிறுவத்திற்கோ மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கோ கொடுக்கப்பட்ட தொடர் பொறுப்புறுதியானது, மாறான உடன்பாடு எதுவும் இல்லாதிருக்கையில், அந்த நிறுவ அமைப்பில் மாற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து, எதிர்கால நடவடிக்கைகளைப் பொறுத்து முறித்தறவு செய்யப்பட்டதாகிறது.

## அத்தியாயம் VI

## நிறுவத்தைக் கலைத்தல்

நிறுவத்தைக் கலைத்தல்.

39. ஒரு நிறுவத்தின் கூட்டாளிகள் அனைவருக்கும் இடையேயான கூட்டாண்மையைக் கலைத்தல், ''நிறுவத்தைக் கலைத்தல்'' என்று வழங்கப்படும்.

உடன்பாட்டின் வாயிலாகக் கலைத்தல்.

40. ஒரு நிறுவம், கூட்டாளிகள் அனைவரின் இசைவுடனோ, கூட்டாளிகளுக்கு இடையேயான ஓர் ஒப்பந்தத்திற்கு இணங்கவோ கலைக்கப்படலாம்.

கட்டாயமாகக் கலைத்தல்.

41. (அ) கூட்டாளிகள் அனைவருமோ கூட்டாளிகளில் ஒருவர் தவிர, மற்ற அனைவருமோ நொடித்துப்போனவர்கள் என நீதி முறையில் தீர்மானிக்கப்படுவதால், அல்லது

(ஆ) நிறுவத்தின் தொழில் நடத்தப்பட்டு வருவதை, அல்லது கூட்டாளிகள் அதனைக் கூட்டாண்மையில் நடததுவதைச் சட்ட முரணான தாக ஆக்குகிற நிகழ்ச்சி எதுவும் நேர்வதால்

ஒரு நிறுவம் கலைக்கப்படுவதாகிறது:

வரம்புரையாக : நிறுவத்தினால் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் துணிவுகள் அல்லது தொழிலேற்புகள் தனித்து வெவ்வேறாக நடத்தப்படுகிறவிடத்து, சட்டப்படியான தொழில் துணிவுகளையும் தொழிலேற்புகளையும் பொறுத்தவரை அவற்றில் ஒன்றின் அல்லது மேற்பட்டவற்றின் சட்டமுரணான தன்மை மட்டுமே, அந்த நிறுவத்தின் கலைப்பை ஏற்படுத்தாது.

எதிர்வுறுவதாலும் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நேர்வதன்மீது கலைத்தல்.

42. கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்கு உட்பட்டு, ஒரு நிறுவம்—

(அ) குறிப்பிட்ட ஒரு காலவரைக்கு அமைக்கப்பட்டிருந்து, அந்தக் காலவரை கழிவுறுவதனால்,

(ஆ) ஒன்று அல்லது மேற்பட்ட தொழில்துணிவுகளை அல்லது தொழிலேற்புகளை நடத்துவதற்கென அமைக்கப்பட்டிருந்து, அவை நிறைவுறுவதனால்,

(இ) ஒரு கூட்டாளி இறந்து விடுவதால், மற்றும்

(ஈ) ஒரு கூட்டாளி நொடித்துப் போனவரென நீதிமுறையில் தீர்மானிக்கப்படுவதால்

கலைக்கப்படுவதாகிறது.

**விருப்புநிலைக் கூட்டாண்மையை அறிவிப்பு வாயிலாகக் கலைத்தல்.**

43. (1) நிறுவம் விருப்புநிலைக் கூட்டாண்மையாக இருக்குமிடத்து, கூட்டாளி எவரும், அந்த நிறுவத்தைக் கலைப்பதற்கான தமது கருத்தினைக் கொண்ட எழுத்துவழி அறிவிப்பைப் பிற கூட்டாளிகள் அனைவருக்கும் தெரிவிப்பதன் வாயிலாக, அந்த நிறுவம் கலைக்கப்படலாம்.

(2) கலைத்தலுக்கான தேதி என்று அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து அல்லது தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லையெனில் அவ்வாறு அறிவிப்புத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து, அந்த நிறுவம் கலைக்கப்படுவதாகிறது.

**நீதிமன்றத்தின் வாயிலாகக் கலைத்தல்.**

44. ஒரு கூட்டாளியின் உரிமைவழக்கின் மீது, நீதிமன்றம், பின்வரும் காரணங்களில் எதனைக் கொண்டும் நிறுவத்தைக் கலைக்கலாம் :—

(அ) கூட்டாளி ஒருவர் மனச்சீர்கேடு உற்றவராகிவிட்டார்; அத்தகைய நேர்வில் அவ்வாறு ஆகிவிட்ட அந்தக் கூட்டாளியின் துணை நண்பர், பிற கூட்டாளி எவரையும் போன்றே, உரிமை வழக்குத் தொடரலாம் ;

(ஆ) உரிமைவழக்குத் தொடர்கிற கூட்டாளி அல்லாத கூட்டாளி ஒருவர், கூட்டாளி என்கிற முறையில் தன் கடமைகளை எந்த வகையிலும் நிறைவேற்றுவதற்கு நிலையாகத் திறனற்றவராகிவிட்டார் ;

(இ) உரிமை வழக்குத் தொடர்கிற கூட்டாளி அல்லாத கூட்டாளி ஒருவர் நடைபெறும் தொழிலின் தன்மையைப் பொறுத்து, அத்தொழிலைக் குந்தகமாகப் பாதிக்கக்கூடிய வகையில் நடந்துகொண்ட குற்றத்தை இழைத்துள்ளார் ;

(ஈ) உரிமை வழக்குத் தொடர்கிற கூட்டாளி அல்லாத கூட்டாளி ஒருவர், நிறுவத்தின் அலுவற்பாடுகளை மேலாண்மை செய்வது அல்லது அதன் தொழிலை நடத்துவது தொடர்பான உடன்பாடுகளை வேண்டுமென்றே அல்லது விடாப்பிடியாகத் தொடர்ந்து மீறியிருக்கிறார் அல்லது பிற கூட்டாளிகள் அத்தொழிலை அவருடன் கூட்டாக நடத்துவது தகுமான முறையில் இயலாத வகையில் அந்தத் தொழில் தொடர்பான பொருட்பாடுகளில் அவர் அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார் ;

(உ) உரிமை வழக்குத் தொடர்கிற கூட்டாளி அல்லாத கூட்டாளி ஒருவர், நிறுவத்தில் தமக்குள்ள உரித்தம் முழுவதையும் மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு எந்த முறையிலேனும் மாற்றம் செய்திருக்கிறார் அல்லது உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908இக்கான முதலாம் இணைப்புப் பட்டியலில் உள்ள கட்டளை XXIஇன் விதி 40இன் வகையங்களின்படி தமது பங்கினைப் பொறுப்புரிமைக்கு உள்ளாக்க அனுமதித்துள்ளார் அல்லது அந்தக் கூட்டாளியால் செலுத்தப்பட வேண்டிய நிலவரி நிலுவையை அல்லது நிலவரி நிலுவைகளைப் போன்ற தொகை எதனையும் வசூலிப்பதற்காக அதனை விற்க அனுமதித்துள்ளார் ; 5/1908

(ஊ) அந்த நிறுவத்தின் தொழிலை இழப்பு எதுவும் இல்லாமல் நடத்தி வர இயலவில்லை ; அல்லது

(எ) அந்த நிறுவம் கலைக்கப்படுவதை நேரியதாகவும் நேர்தகவான தாகவும் ஆக்குகிற வேறு காரணம் எதுவும்.

கலைப்புக்குப் பின்பு செய்யப்பட்ட கூட்டாளிகளின் செயல்களுக்கான பொறுப்படைவு.

45. ஒரு நிறுவம் கலைக்கப்பட்டபோதிலும், அத்தகைய கலைப்புப் பற்றி பொது அறிவிப்பு கொடுக்கப்படும் வரையில், கூட்டாளிகளில், எவர் ஒருவராலும் செய்யப்பட்ட எந்தச் செயல் அத்தகைய கலைப்புக்கு முன் செய்யப்பட்டிருந்தால் நிறுவத்தின் செயலாக இருந்திருக்குமோ அந்தச் செயல் பொறுத்து மூன்றாமவருக்கு அவர்கள் தொடர்ந்து பொறுப்படைவு உற்றவராவர் :

வரம்புரையாக : இறந்துபோன கூட்டாளியின் அல்லது நொடித்துப் போனவர் என நீதிமுறையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிற கூட்டாளியின் அல்லது அந்த நிறுவத்துடன் தொழில் தொடர்பு கொண்டுள்ள ஒருவரால் கூட்டாளி என அறிந்துகொள்ளப்பட்டிராத நிலையில் அந்த நிறுவத்தி லிருந்து விலகிக்கொள்கிற கூட்டாளியின் சொத்து, அவர் ஒரு கூட்டாளியாக இருப்பது அற்றுப்போகிற தேதிக்குப் பின்பு செய்யப்பட்ட செயல்களுக்கு, இந்தப் பிரிவின்படி பொறுப்படைவு ஆவதில்லை.

(2) உட்பிரிவு (1)இன்படியான அறிவிப்புகள் கூட்டாளி எவராலும் கொடுக்கப்படலாம்.

கலைப்புக்குப் பின்பு தொழிலை முறித்தறவு செய்வதற்குக் கூட்டாளிகளுக் குள்ள உரிமை.

46. ஒரு நிறுவம் கலைக்கப்படுவதன்மேல், கூட்டாளி ஒவ்வொருவரும் அல்லது அவருடைய சார்பாற்றுநர் எவரும், தமக்கும் பிற கூட்டாளிகளுக்கும் அல்லது அவர்களின் சார்பாற்றுநர்களுக்கும் இடையே, அந்த நிறுவத்தின் கடன்களையும் பொறுப்படைவுகளையும் செலுத்துவதற்கென, அந்த நிறுவத்தின் சொத்தினைப் பயன்படுத்துவதற்கும் எஞ்சியிருப்பதை அந்தக் கூட்டாளிகளுக்கு அல்லது அவர்களின் சார்பாற்றுநர்களுக்கு இடையே அவர்களின் உரிமைகளுக்கு ஏற்ப, பங்கிட்டுக் கொள்வதற்கும் உரிமை கொண்டவர் ஆவார்.

நிறுவத்தை முறித்தறவு செய்வதற்கான கூட்டாளிகளின் அதிகாரம் தொடர்ந்திருத்தல்

47. ஒரு நிறுவம் கலைக்கப்பட்டதற்குப் பின்பு, அந்த நிறுவத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒவ்வொரு கூட்டாளிக்கும் உள்ள அதிகாரமும், கூட்டாளி களுக்கிடையேயான பிற உரிமைகளும் கடப்பாடுகளும் அந்த நிறுவம் கலைக்கப்பட்டிருந்தபோதிலும், அவை அந்த நிறுவத்தின் அலுவற்பாடுகளை முறித்தறவு செய்வதற்கும், தொடங்கப்பட்டு, ஆனால், கலைக்கப்பட்ட நேரத்தில் முடிவுறாமலிருக்கும் நடவடிக்கைகளை முழுமையுறச் செய்வதற்கும், தேவையாகும் அளவுக்குத் தொடந்திருக்குமே அன்றி, பிறவாறு அன்று :

வரம்புரையாக : நொடித்துப்போனவர் என நீதிமுறையில் தீர்மானிக்கப் பட்டிருக்கிற கூட்டாளி ஒருவரின் செயல்களினால் அந்த நிறுவம் எந்நேர்விலும் கட்டுப்படுத்தப்படுவதில்லை ; ஆனால், நீதிமுறையில் தீர்மானிக்கப்பட்டதன் பின்பு, நொடித்துப்போனவரின் ஒரு கூட்டாளியெனத் தம்மைக் காட்டிக் கொள்கிற அல்லது அவ்வாறு காட்டிக்கொள்ளத் தெரிந்தே இசைவளிக்கிற நபர் எவரின் பொறுப்படைவினையும் இந்த வரம்புரை பாதிப்பதில்லை.

கூட்டாளிகளுக்கிடையே கணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் முறை.

48. நிறுவத்தைக் கலைத்த பின்பு அதன் கணக்குகளைத் தீர்த்துக் கொள்வதில், பின்வரும் விதிகள், கூட்டாளிகளால் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு உட்பட்டு, பின்பற்றப்படுதல் வேண்டும் :—

(அ) முதலீட்டின் பற்றாக்குறைகள் உள்ளிட்ட இழப்புகள், முதலாவதாக ஆதாயங்களிலிருந்தும், அடுத்து முதலீட்டிலிருந்தும், கடைசியாகத் தேவைப்படின், ஆதாயங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்குக் கூட்டாளிகள் உரிமை கொண்டிருக்கும் வீதங்களில் அவர்களால் தனிப்பட்ட முறையில் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) முதலீட்டின் பற்றாக்குறைகளை ஈடு செய்வதற்குக் கூட்டாளி களால் பங்களிப்பாகக் கொடுக்கப்பட்ட தொகைகள் எவையும் உள்ளடங்கலாக, நிறுவத்தின் சொத்திருப்புகள், பின்வரும் முறையிலும் வரிசையிலும், பயன்படுத்தப்படுதல் வேண்டும்:—

(i) நிறுவத்தின் கடன்களை மூன்றாம் தரப்பினர்களுக்குச் செலுத்துதல் ;

(ii) முதலீட்டினின்றும் வேறுபட்ட முன்னளிப்புத் தொகைக்காக, நிறுவத்திலிருந்து ஒவ்வொரு கூட்டாளிக்கும் கொடுபட வேண்டிய தொகையை விகிதப்படி அவருக்குச் செலுத்துதல் ;

(iii) முதலீட்டைப் பொறுத்து ஒவ்வொரு கூட்டாளிக்கும் கொடுபட வேண்டிய தொகையை அவருக்கு விகிதப்படி செலுத்துதல்; மற்றும் ;

(iv) எஞ்சியதாக எதுவும் இருப்பின், அது ஆதாயங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்குக் கூட்டாளிகள் உரிமை கொண்டுள்ள விதங்களில் அவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

நிறுவத்தின் கடன்களையும் தனிப்பட்ட கடன்களையும் செலுத்துதல்.

49. நிறுவத்தினால் கொடுபட வேண்டிய கூட்டுக் கடன்களும், கூட்டாளி எவராலும் கொடுபட வேண்டிய தனிப்பட்ட கடன்களும் இருக்குமிடத்து, முதற்கண் நிறுவத்தின் சொத்து அந்த நிறுவத்தின் கடன்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் ; மேலும், மிகுதியாக எதுவும் இருப்பின், ஒவ்வொரு கூட்டாளியின் பங்கும், அவரது தனிப்பட்ட கடன்களைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் அல்லது அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ; கூட்டாளி ஒருவரின் தனிப்பட்ட சொத்து, முதலில் அவருடைய தனிப்பட்ட கடன்களைச் செலுத்துவதற்கும், மிகுதியாக எதுவும் இருப்பின், அது அந்த நிறுவத்தின் கடன்களைச் செலுத்துவதற்கும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

கலைப்புக்குப் பின்ப தாமே ஈட்டிய ஆதாயங்கள்.

50. கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்கு உட்பட்டு, பிரிவு 16இன் கூறு (அ)வின் வகையங்கள், கூட்டாளி ஒருவர் இறந்துபோன காரணத்தால் நிறுவம் கலைக்கப்பட்டதன் பின்பும், அதனுடைய அலுவற்பாடுகள் முழுதுற முறித்தறவு செய்யப்படுவதற்கு முன்பும், எஞ்சியுள்ள கூட்டாளி எவராலும் அல்லது இறந்துபோன கூட்டாளியின் சார்பாற்றுநர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்குப் பொருந்துறும் :

வரம்புரையாக : கூட்டாளி அல்லது அவருடைய சார்பாற்றுநர் எவரும், நிறுவத்தின் வணிக நற்பெயரை வாங்கியிருக்குமிடத்து, அந்த நிறுவத்தின் பெயரைப் பயன்படுத்துவதற்கு உள்ள அவரது உரிமையை, இந்தப் பிரிவில் உள்ள எதுவும் பாதிப்பதில்லை.

உரிய காலத்துக்கு முன்னர் கலைக்கப் படுவதன் மீது மிகைப்பங்குத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல்.

51. குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையில் சேர்வதன்மேல், ஒரு கூட்டாளி, மிகைப்பங்குத்தொகை செலுத்தியிருந்து, கூட்டாளி ஒருவரின் இறப்பினால் அல்லாமல் பிறவாறாக, அந்தக் குறிப்பிட்ட காலம் கழிவுறுவதற்கு முன்பு, அந்த நிறுவம் கலைக்கப்படுகிறவிடத்து,—

(அ) முக்கியமாக அவருடைய தவறான நடத்தையினால் அந்தக் கலைப்பு ஏற்பட்டிருந்தாலன்றி, அல்லது

(ஆ) மிகைப்பங்குத் தொகையை அல்லது அதன் பகுதி எதனையும் திருப்பிக் கொடுப்பதற்கான வகையம் எதனையும் கொண்டிராத உடன்பாட்டின்படி அந்தக் கலைப்பு ஏற்பட்டிருந்தாலன்றி,

அவர் எத்தகைய வரையுரைகளின்மீது கூட்டாளியானாரோ அந்த வரையுரைகளையும், அவர் கூட்டாளியாக இருந்த கால அளவையும் கவனத்திற்கொண்டு, மிகைப்பங்குத் தொகையை அல்லது அதன் தகுமான பகுதித் தொகையைத் திரும்பப்பெறுவதற்கு அவர் உரிமை கொண்டவராவார்.

மோசடி அல்லது திரித்துக் காட்டுதல் காரணமாகக் கூட்டாண்மை ஒப்பந்தம் இறுத்தறவு செய்யப்படுகிறவிடத்து எழும் உரிமைகள்.

52. கூட்டாண்மையை ஏற்படுத்தும் ஓர் ஒப்பந்தத்தின் தரப்பினர்களில் எவரும் செய்த மோசடி அல்லது திரித்துக்காட்டுதல் காரணமாக அந்த ஒப்பந்தம் இறுத்தறவு செய்யப்படுகிறவிடத்து, அவ்வாறு இறுத்தறவு செய்வதற்கு உரிமை கொண்டுள்ள கூட்டாளி, அவருக்குள்ள பிற உரிமை எதற்கும் குந்தகமின்றி,—

(அ) அந்த நிறுவத்தில் ஒரு பங்கினை விலைக்கு வாங்கியதற்காக அவரால் செலுத்தப்பட்ட தொகை, பங்களிப்பாக அவரால் கொடுக்கப்பட்ட மூலதனம் இவற்றைப் பொறுத்து, அந்த நிறுவத்தின் கடன்கள் செலுத்தப்பட்ட பின்பு எஞ்சியுள்ள அந்த நிறுவத்தின் மிகுதிப் பணம் அல்லது சொத்திருப்புக்களின் மீதான பற்றுரிமை அல்லது அவற்றை இருத்திவைத்துக் கொள்ளும் உரிமை பெறுவதற்கு,

(ஆ) அந்த நிறுவத்தின் கடன்களுக்காக அவரால் செலுத்தப்பட்ட தொகை எதனையும் பொறுத்து, அந்த நிறுவத்திற்குக் கடன்கொடுக்கவர் என்னும் தகுதிபெறுவதற்கு, மற்றும்

(இ) மோசடி அல்லது திரித்துக் காட்டுதல் என்ற குற்றம் இழைத்த கூட்டாளியால் அல்லது கூட்டாளிகளால் அந்த நிறுவத்தின் கடன்கள் அனைத்தையும் பொறுத்து, அவர் இழப்பீடு பெறுவதற்கு

உரிமை கொண்டவராவார்.

நிறுவத்தின் பெயரை அல்லது நிறுவத்தின் சொத்தினைப் பயன்படுத்து வதைத் தடை செய்வதற்கான உரிமை.

53. ஒரு நிறுவம் கலைக்கப்பட்டதற்குப் பின்பு, கூட்டாளி ஒருவரோ அவருடைய சார்பாற்றுநரோ, கூட்டாளிகளுக்கிடையே இதற்கு மாறான ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில், அந்த நிறுவத்தின் அலுவற்பாடுகள் முழுவதுமாக முறித்தறவு செய்யப்படும் வரையில், பிற கூட்டாளி எவரையும் அல்லது அவரது சார்பாற்றுநரை அந்த நிறுவத்தின் பெயரில் அதேபோன்ற ஒரு தொழிலை நடத்துவதை அல்லது அந்த நிறுவத்தின் சொத்து எதனையும் தம் சொந்த நலனுக்காகப் பயன்படுத்துவதைத் தடைசெய்யலாம் :

வரம்புரையாக : அந்த நிறுவத்தின் வணிக நற்பெயரைக் கூட்டாளி ஒருவரோ அவருடைய சார்பாற்றுநரோ விலைக்கு வாங்கியிருக்குமிடத்து, அந்த நிறுவத்தின் பெயரைப் பயன்படுத்துவதற்கான அவருடைய உரிமையை இந்தப் பிரிவில் உள்ள எதுவும் பாதிப்பதில்லை.

வணிகத்தைத் தடை செய்யும் உடன்பாடுகள்.

54. நிறுவம் கலைக்கப்பட்டதன்மீது அல்லது அதனை எதிர்நோக்கி, கூட்டாளிகள் தங்களில் சிலரோ, அனைவருமோ, குறித்துரைக்கப்பட்ட காலஅளவுக்குள் அல்லது குறித்துரைக்கப்பட்ட வட்டார எல்லைகளுக்குள், அந்த நிறுவத்தின் தொழிலைப் போன்றதொரு தொழிலை நடத்துவதில்லை என்ற ஓர் உடன்பாட்டினைச் செய்துகொள்ளலாம் ; மேலும், இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872இன் பிரிவு 27இல் அடங்கியுள்ள எது எவ்வாறி ருப்பினும், அத்தகைய உடன்பாட்டில் உள்ள வரையறைகள் தகுமான வையாக இருப்பின், அந்த உடன்பாடு செல்லுந்தன்மை உடையதாகும். 9/1872

கலைக்கப்பட்ட தற்குப் பின்பு வணிக நற்பெயரை விற்பனை செய்தல்.

55. (1) நிறுவம் கலைக்கப்பட்டதற்குப் பின்பு, அதன் கணக்குகளைத் தீர்த்துக்கொள்வதில், கூட்டாளிகளுக்கு இடையேயான ஒப்பந்தத்திற்குட் பட்டு, வணிகநற்பெயர் சொத்திருப்புக்களில் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும் ; மேலும், அது தனியாகவோ அல்லது நிறுவத்தின் மற்ற சொத்துக்களுடன் சேர்ந்தோ விற்கப்படலாம்.

வணிக நற்பெயரின் வாங்குநருக்கும் விற்குநருக்கும் உள்ள உரிமைகள்.

(2) நிறுவம் கலைக்கப்பட்டதற்குப் பின்பு, அதன் வணிக நற்பெயர் விற்கப்படுகிறவிடத்து, கூட்டாளி ஒருவர், வாங்குநரின் தொழிலுக்குப் போட்டியான தொழில் ஒன்றை நடத்தலாம், மேலும், அவர் அத்தகைய தொழிலை விளம்பரப்படுத்தலாம் ; ஆனால், அவருக்கும் வாங்குநருக்கும் இடையேயான உடன்பாட்டிற்கு உட்பட்டு, அவர் —

(அ) நிறுவத்தின் பெயரைப் பயன்படுத்துதல் ஆகாது ;

(ஆ) அந்த நிறுவத்தின் தொழிலைத் தாமே நடத்தி வருவதாகச் சொல்லிக் கொள்ளுதல் ஆகாது ; அல்லது

(இ) அந்த நிறுவம் கலைக்கப்படுவதற்கு முன்பு, அதனுடன் தொழில் தொடர்பு கொண்டிருந்த நபர்களின் வாடிக்கையை வலிந்து பெறுதல் ஆகாது.

வணிகத்தைத் தடை செய்யும் உடன்பாடுகள்.

(3) ஒரு நிறுவத்தின் வணிக நற்பெயரை விற்பதன்மீது கூட்டாளி எவரும், வாங்குநருடன் குறித்துரைக்கப்பட்ட காலஅளவுக்குள் அல்லது குறித்துரைக்கப்பட்ட வட்டார எல்லைகளுக்குள், அந்த நிறுவத்தின் தொழிலைப் போன்றதொரு தொழிலை நடத்துவதில்லை என்ற ஓர் உடன்பாட்டினைச் செய்து கொள்ளலாம் ; மேலும், இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872, பிரிவு 27இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய உடன்பாட்டில் உள்ள வரையறைகள் தகுமானவையாக இருப்பின், அந்த உடன்பாடு செல்லுந் தன்மை உடையதாகும். 9/1872

## அத்தியாயம் VII

### நிறுவங்களைப் பதிவு செய்தல்

56. எந்த ஒரு மாநிலத்தின் அரசாங்கமும், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த மாநிலத்திற்கு, அல்லது அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் பகுதி எதற்கும் இந்த அத்தியாயத்தின் வகையங்கள் பொருந்துறாது என்று பணிக்கலாம்.

இந்த அத்தியாயம் பொருந்துறுவதிலிருந்து விலக்களிப்பதற்கான அதிகாரம்.

57. (1) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நிறுவப் பதிவாளர்களை அமர்த்தலாம் ; மேலும், அவர்கள் தங்களுடைய அதிகாரங்களைச் செலுத்தவும், தங்களுடைய கடமைகளை ஆற்றவும் வேண்டிய வட்டாரங்கள் எவை என வரையறுக்கலாம்.

பதிவாளர்களின் பணியமர்த்தம்.

45/1860

(2) ஒவ்வொரு பதிவாளரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 21இன் பொருளின்படி ஓர் அரசுப் பணியாளராகக் கொள்ளப் பெறுவார்.

58. (1) பின்வரும் விவரங்களை, வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில், வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து, நிறுவத்தின் தொழிலிடம் அமைந்திருக்கிற அல்லது அமைக்கக் கருதப்பட்டிருக்கிற வட்டாரத்தின் பதிவாளருக்கு அஞ்சலில் அனுப்புதல் வாயிலாக அல்லது நேரடியாக ஒப்புவிப்பதன் வாயிலாக, எச்சமயத்திலும், அந்நிறுவத்தைப் பதிவு செய்யலாம் :

பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

(அ) நிறுவத்தின் பெயர்,

(ஆ) நிறுவத்தின் தொழிலை நடத்துவதற்கான இடம் அல்லது தலைமை இடம்,

(இ) அந்த நிறுவம் தொழில்நடத்திவருகிற பிற இடங்களின் பெயர்கள்,

(ஈ) ஒவ்வொரு கூட்டாளியும் அந்த நிறுவத்தில் சேர்ந்த தேதி,

(உ) கூட்டாளிகளின் முழுப்பெயர்கள் மற்றும் அவர்களுடைய நிலையான முகவரிகள், மற்றும்

(ஊ) அந்த நிறுவத்தின் காலவரை

அந்த விவரவுரை, கூட்டாளிகள் அனைவராலும் அல்லது இதற்கென தனியுறு அதிகாரமளிக்கப்பெற்ற முகவர்களால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(2) அந்த விவரவுரையில், கையொப்பமிடுகிற ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்பட்ட முறையில், அது உண்மையானதென உறுதி அளித்தல் வேண்டும்.

(3) விரும்பத்தகாதது என மாநில அரசாங்கம் கருதும் எந்த ஒரு பெயரிலும் நிறுவம் பதிவு செய்யப்படுதல் ஆகாது.

(4) மாநில அரசாங்கத்தின் எழுத்துவழி முன்ஒப்பளிப்புடன் அன்றி, பின்வரும் சொற்களில் எதனையும் கொண்டிருக்கிற பெயரில், எந்த நிறுவமும் பதிவு செய்யப்படுதல் ஆகாது :—

(அ) " ஒன்றியம் ", " அரசு ", "குடியரசுத்தலைவர் ", " குடியரசு " அல்லது மைய அல்லது மாநில அரசாங்கத்தின் ஒப்பளிப்பை, ஒப்பேற்பை அல்லது புரவளிப்பைத் தெரிநிலையாகவோ உட்கிடையாகவோ தெரிவிக்கும் சொல் எதுவும் : மற்றும்

(ஆ) " நகராட்சிக்குரிய ", " பட்டயத்திலுள்ள " அல்லது நகராட்சி அல்லது பிற வட்டார அதிகாரஅமைப்பு எதனுடனும் உள்ள தொடர்பினைக் குறிப்பாய் உணர்த்துகிற அல்லது குறிப்பாய் உணர்த்துவதாகக் கருதப்படும் சொல் எதுவும் :

வரம்புரையாக: இந்த உட்பிரிவில் உள்ள எதுவும், இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 1965இன் தொடக்கத் தேதிக்கு முன்பு பதிவு செய்யப்பட்ட நிறுவம் எதற்கும் பொருந்துறாது.

பதிவு செய்தல்.

59. பிரிவு 58இன் வகையங்கள் முறையாகப் பின்பற்றப்பட்டிருக்கின்றன என்று பதிவாளர் தெளிவுறக்காணும்போது, அவர் நிறுவப் பதிவேடு என வழங்கப்படும் பதிவேட்டில் அந்த விவரவுரையைப் பதிவு செய்து அதனைக் கோப்பில் சேர்த்து வைத்தல் வேண்டும்.

பதிவேட்டைத் திருத்தம் செய்வதற்கான தனியுறு வகையம்.

59அ. (1) இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டதன் காரணமாக, அல்லது ஆந்திர மாநிலச் சட்டம், 1953இன்படி மைசூர் மாநிலத்துடன் பெல்லாரி மாவட்டம் சேர்க்கப்பட்டதன் காரணமாக (1953ஆம் ஆண்டு மையச் சட்டம் XXX) அல்லது மறு அமைப்புச் சட்டம், 1956இன்படி (1956ஆம் ஆண்டு மையச் சட்டம் XXXVII) மாநிலங்கள் மாற்றியமைக்கப்பட்டதன் காரணமாக அல்லது ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு (எல்லைக் கோடுகள் மாற்றம்) சட்டம், 1959இன்படி (1959ஆம் ஆண்டு மையச் சட்டம் LV) எல்லைக் கோடுகள் மாற்றியமைக்கப்பட்டதன் காரணமாக, எந்த நிறுவத்தின் தொழிலிடம் தமிழ்நாடு மாநிலத்தில் இடம் பெற்றிருப்பது அற்றுப் போய்விடுகிறதோ, அந்த நிறுவம் தொடர்பான பதிவுகளை, தமிழ்நாடு மாநில அரசாங்கத்தால் அமர்த்தப் பெற்ற நிறுவப் பதிவாளர், எழுத்துவழி ஆணையினால் பதிவேட்டிலிருந்து நீக்கிவிடுவதன் மூலம் அப்பதிவேட்டில் திருத்தம் செய்யலாம்.

அவ்வாறே பதிவாளர், எந்த நிறுவம் வேறு மாநிலத்தின் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருந்து, அதன் தொழிலிடம் மேலே சொல்லப்பட்ட மாநிலங்கள் மறுஅமைவு செய்யப்பட்டதன் காரணமாக, அல்லது எல்லைக் கோடுகள் மாற்றியமைக்கப்பட்டதன் காரணமாக, தமிழ்நாடு மாநிலத்தின் பகுதியாக அமைந்துவிடுகிறதோ, அந்த நிறுவம் தொடர்பான பதிவுகளைப் பதிவேட்டில் சேர்த்து அதனைத் திருத்தம் செய்யலாம்:

வரம்புரையாக: பதிவாளர் ஆணை பிறப்பிப்பதற்கு முன்னர், தாம் தேவை எனக் கருதுகிற விசாரணையைச் செய்யலாம்.

(2) எந்த நிறுவம் தொடர்பான பதிவுகள் மேலே சொல்லப்பட்டபடி நீக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த நிறுவம் பொறுத்து ஒரு பதிவாளருக்குரிய கடமைகளை, அத்தகைய திருத்தத்திற்குப் பின்பு, பதிவாளர் ஆற்றி வருவது அற்றுப்போகும்; எந்த நிறுவங்கள் தொடர்பான பதிவுகள் மேலே சொல்லப்பட்டபடி சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ அந்த நிறுவங்கள் அனைத்தையும் பொறுத்து, ஒரு பதிவாளருக்குரிய கடமைகள் அனைத்தையும் பதிவாளர் ஆற்றி வருவார்.

(3) உட்பிரிவு (1)இன்படியான ஆணையினால் குறையுற்ற நபர் எவரும், தமிழ்நாடு மாநில அரசாங்கம் இது தொடர்பாகக் குறித்துரைக்கும் அதிகாரஅமைப்பிற்கு, குறித்துரைக்கப்படும் காலத்திற்குள், மேன்முறையீடு செய்து கொள்ளலாம்; அந்த அதிகார அமைப்பு, தான் தக்கது எனக் கருதும் ஆணையை அம்மேன்முறையீட்டின்மீது பிறப்பிக்கலாம்.

(4) உட்பிரிவு (1)இன்படி பதிவாளர் பிறப்பித்த ஆணை எதுவும் அல்லது உட்பிரிவு (3)இன்படி அந்த ஆணையின்மீது ஒரு மேன்முறையீடு செய்யப்பட்டிருக்குமிடத்து, மேன்முறையீட்டு அதிகாரஅமைப்பு பிறப்பித்த ஆணை எதுவும் அறுதியானதாகும்.

(5) தமிழ்நாடு மாநில அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் தேதியிலிருந்து இந்தப் பிரிவின் வகையங்கள் செல்லாற்றலிலிருப்பது அற்றுப்போகும்.

நிறுவத்தின் பெயர், தலைமைத் தொழிலிடம் இவற்றைப் பொறுத்த மாற்றங்களைப் பதிவு செய்தல்.

60. (1) நிறுவத்தின் பெயரில் அல்லது பதிவு செய்யப்பட்ட நிறுவத்தின் தலைமைத் தொழிலிடத்தில் மாற்றம் செய்யப்படுகிறபோது, அந்த மாற்றத்தைக் குறித்துரைத்து, பிரிவு 58இன்படி வேண்டுறுத்தப்படுகிற முறையில் கையொப்பமும் உண்மை உறுதியும் கொண்ட ஒரு விவரவுரையை, கட்டணத்துடன் சேர்த்து, பதிவாளருக்கு அனுப்பலாம்.

(2) உட்பிரிவு (1)இன் வகையங்கள் முறையாகப் பின்பற்றப்பட்டிருக்கின்றன என்று பதிவாளர் தெளிவுறக் காணும்போது, நிறுவப் பதிவேட்டிலுள்ள, அந்த நிறுவம் தொடர்பான பதிவை அந்த விவரவுரைக்கு இணங்கத் திருத்தம் செய்தல் வேண்டும்; மேலும், அந்தப் பதிவை நிறுவம் தொடர்பாக, பிரிவு 59இன்படி கோப்பில் வைக்கப்பட்ட விவரவுரையுடன் சேர்த்து வைத்தல் வேண்டும்.

*கிளை நிறுவங்கள் மூடப்படுவது பற்றியும் திறக்கப்படுவது பற்றியும் குறித்து வைத்தல்.*

61. பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவம், எந்த ஓர் இடத்திலும், தொழில் நடத்துவதை நிறுத்திவிடும்போது அல்லது அதன் தலைமைத் தொழிலிடமாக இல்லாத இடம் எதிலும் தொழிலைத் தொடங்கும்போது, அந்த நிறுவத்தின் கூட்டாளி அல்லது முகவர் எவரும், அதனைப் பற்றிய தகவலைப் பதிவாளருக்கு அனுப்பலாம்; பதிவாளர் அந்தத் தகவலை நிறுவப் பதிவேட்டில் உள்ள அந்த நிறுவம் தொடர்பான பதிவில் குறித்து வைத்தல் வேண்டும்; மேலும், அந்தத் தகவலைப் பிரிவு 59இன்படி அந்த நிறுவம் தொடர்பான விவரவுரையுடன் சேர்த்து வைத்தல் வேண்டும்.

*கூட்டாளிகளின் பெயர்களிலும் முகவரிகளிலும் செய்யப்படுகிற மாற்றங்களைக் குறித்து வைத்தல்.*

62. பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவத்தின் கூட்டாளி எவரும், தம் பெயரில் அல்லது நிலையான முகவரியில் மாற்றம் செய்யும்போது அந்த மாற்றம் பற்றிய தகவலை அந்த நிறுவத்தின் கூட்டாளி அல்லது முகவர் எவரும் பதிவாளருக்கு அனுப்பலாம்; பதிவாளர், பிரிவு 61இல் வகை செய்யப்பட்டுள்ள முறையில், அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

*நிறுவத்தில் ஏற்படும் மாற்றங்களையும் அதன் கலைப்பையும் பதிவு செய்தல்.*

63. (1) பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவத்தின் அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறபோது, வந்துசேரும், தொடர்ந்திருக்கும் அல்லது விலகிப்போகும் கூட்டாளி எவரும், மற்றும் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவம் கலைக்கப்படும் பொழுது, கலைப்பினை ஒட்டி முன்பு கூட்டாளியாக இருந்த நபர் எவரும், அல்லது அவருடைய முகவர் எவரும் அல்லது இதற்கெனத் தனியுறு அதிகாரமளிக்கப் பெற்ற நபர் எவரும், பதிவாளருக்கு அத்தகைய மாற்றம் அல்லது கலைப்பைப்பற்றி, அதன் தேதியையும் குறித்துரைத்து அறிவிப்புக் கொடுக்கலாம்; மேலும், பதிவாளர், நிறுவப் பதிவேட்டிலுள்ள அந்நிறுவம் தொடர்பான பதிவில் அந்த அறிவிப்பைப் பதிவு செய்தல் வேண்டும்; மேலும், நிறுவம் தொடர்பாக, பிரிவு 59இன்படி சேர்த்து வைக்கப்பட்ட விவரவுரையுடன் அந்த அறிவிப்பையும் கோப்பில் வைத்தல் வேண்டும்.

*இளவர் ஒருவர் விட்டு நீங்குவதைப் பதிவு செய்தல்.*

(2) இளவர் ஒருவர் நிறுவத்தின் கூட்டாண்மை நலன்களைப் பெறுவதற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கையில் அவர் உரிமை வயதடைந்து ஒரு கூட்டாளியாக ஆவதற்கு அல்லது ஆகாமலிருப்பதற்குத் தேர்வுசெய்து கொள்ளும்போதும், அப்போது அந்த நிறுவம் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவமாக இருக்கும்போதும், அவரோ இதற்கெனத் தனியுறு அதிகாரம் அளிக்கப பெற்ற அவருடைய முகவரோ, தாம் ஒரு கூட்டாளியாக ஆகியிருப்பதாகவோ ஆகவில்லை என்றோ பதிவாளருக்கு அறிவிப்புக் கொடுக்கலாம்; பதிவாளர், உட்பிரிவு (1)இல் வகை செய்யப்பட்டுள்ள முறையில் அந்த அறிவிப்பின்மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

*தவறுகளைச் சரி செய்தல்.*

64. (1) நிறுவங்களுக்கான பதிவேட்டில், நிறுவம் எதனின் தொடர்பாகவும் உள்ள பதிவை, இந்த அத்தியாயத்தின்படி அந்த நிறுவம் தொடர்பாகக் கோப்பில் வைக்கப்பட்ட ஆவணங்களுடன் இணங்கி இருக்கச் செய்வதன் பொருட்டு, தவறு எதனையும் சரிசெய்வதற்கு எல்லா நேரங்களிலும் பதிவாளர் அதிகாரம் பெற்றிருப்பார்.

(2) ஒரு நிறுவம் தொடர்பாக இந்த அத்தியாயத்தின்படி கோப்பில் வைக்கப்பட்ட ஆவணம் எதனிலும் கையொப்பமிட்ட தரப்பினர்கள் அனைவரும் செய்து கொண்ட விண்ணப்பத்தின் மீது, பதிவாளர் அந்த ஆவணத்தில் அல்லது நிறுவங்களுக்கான பதிவேட்டிலுள்ள அதனைப் பற்றிய பதிவில் அல்லது குறிப்பில் உள்ள தவறு எதனையும் சரி செய்யலாம்.

*நீதிமன்ற ஆணை வாயிலாகப் பதிவேட்டைத் திருத்தம் செய்தல்.*

65. பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவம் தொடர்பான பொருட்பாடு எதனையும் தீர்முடிவு செய்கிற ஒரு நீதிமன்றம், நிறுவங்களுக்கான பதிவேட்டிலுள்ள அந்த நிறுவம் தொடர்பான பதிவில், அந்தத் தீர்முடிவின் பின்விளைவாகத் திருத்தம் எதனையும் பதிவாளர் செய்தல் வேண்டும் என்று பணிக்கலாம்; மேலும், பதிவாளர் அந்தப் பதிவினை அவ்வாறே திருத்தம் செய்தல் வேண்டும்.

பதிவேட்டையும் கோப்பில் உள்ள ஆவணங்களையும் பார்வையிடுதல்.

66. (1) வகுத்துரைக்கப்படும் கட்டணம் செலுத்தப்படுவதன் மீது, நிறுவங்களுக்கான பதிவேடு, எவராலும் பார்வையிடப்படுவதற்கு உரியதாகும்.

(2) இந்த அத்தியாயத்தின்படி கோப்பில் வைக்கப்பட்ட விவரவுரைகள், அறிவிப்புகள், தகவல்கள் ஆகியவை அனைத்தும், வகுத்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்குட்பட்டும் வகுத்துரைக்கப்படும் கட்டணம் செலுத்தப்படுவதன்மீதும், பார்வையிடப்படுவதற்கு உரியனவாகும்.

படிகள் வழங்கப்படுதல்.

67. வகுத்துரைக்கப்படும் கட்டணம் செலுத்தி, நபர் எவரும் விண்ணப்பிப்பதன்மீது, நிறுவங்களுக்கான பதிவேட்டில் உள்ள பதிவு அல்லது அதன் பகுதி எதனின் படியையும் பதிவாளர் தம் கைப்பட உறுதிச்சான்றளித்துக் கொடுத்தல் வேண்டும்.

சான்றுபற்றிய விதிகள்.

68. (1) நிறுவங்களுக்கான பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட அல்லது குறிப்புரை எழுதப்பட்ட விவரவுரை, தகவல் அல்லது அறிவிப்பு எதுவும், எந்த நபரால் அல்லது எந்த நபரின் சார்பாகக் கையொப்பம் இடப்பட்டுள்ளதோ, அந்த நபருக்கு எதிராக, அதில் உரைக்கப்பட்டுள்ள பொருண்மையைப் பொறுத்தவரை, அந்த விவரவுரை, தகவல் அல்லது அறிவிப்பு எதுவும் அறுதியான மெய்ப்பிப்பு ஆகும்.

(2) நிறுவங்களுக்கான பதிவேட்டில் ஒரு நிறுவம் தொடர்பாக உள்ள பதிவின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட படி ஒன்று, அந்த நிறுவம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும், அந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட விவரவுரை, தகவல் அல்லது அறிவிப்பு எதனின் உள்ளடக்கங்களையும் மெய்ப்பிப்பதற்காக முன்னிடப்படலாம்.

பதிவு செய்யாமையின் விளைவு.

69. (1) ஓர் ஒப்பந்தத்திலிருந்து எழுகிற அல்லது இந்தச் சட்டத்தால், வழங்கப்பட்ட உரிமையைச் செல்லுறுத்துவதற்கான உரிமை வழக்கு எதுவும், ஒரு நிறுவம் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி, மற்றும் வழக்கிடுகிற நபர், நிறுவங்களின் பதிவேட்டில் அந்நிறுவத்தின் கூட்டாளியாக இருப்பதாக அல்லது இருந்ததாகக் காட்டப்பட்டிருந்தாலன்றி, வழக்கிடுகிற அவர் அல்லது அவர் சார்பில் அந்த நிறுவத்திற்கு எதிராகவோ, அந்த நிறுவக் கூட்டாளியாக இருக்கிறதாக அல்லது இருந்ததாகச் சொல்லப்படுகிற நபர் எவருக்கும் எதிராகவோ எந்த ஒரு நீதிமன்றத்திலும் தொடரப்படுதல் ஆகாது.

(2) ஓர் ஒப்பந்தத்திலிருந்து எழுகிற ஓர் உரிமையைச் செல்லுறுத்துவதற்கான உரிமை வழக்கு எதுவும், ஒரு நிறுவம் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி, மற்றும் வழக்கிடுகின்ற நபர்கள் நிறுவங்களின் பதிவேட்டில் அந்நிறுவத்தின் கூட்டாளியாக இருப்பதாக அல்லது இருந்ததாகக் காட்டப்பட்டிருந்தாலன்றி, அந்நிறுவத்தால் அல்லது அதன் சார்பில், மூன்றாம் தரப்பினர் எவருக்கும் எதிராக எந்த நீதிமன்றத்திலும் தொடரப்படுதல் ஆகாது.

(3) உட்பிரிவுகள் (1), (2) ஆகியவற்றின் வகையங்கள், எதிரீடைக் கோரிக்கையைப் பொறுத்து அல்லது ஓர் ஒப்பந்தத்திலிருந்து எழுகிற உரிமையைச் செல்லுறுத்துவதற்கான பிற நடவடிக்கை பொறுத்துப் பொருந்துறும், ஆனால், அவை பின்வருவனவற்றிற்குப் பொருந்துறாது—

(அ) ஒரு நிறுவத்தைக் கலைப்பதற்காக அல்லது கலைக்கப்பட்ட நிறுவத்தின் கணக்குகளைக் காட்டுவதற்காக, வழக்குத் தொடர்வதற்கான உரிமை எதனையும், அல்லது கலைக்கப்பட்ட நிறுவத்தின் சொத்து கைவரப் பெறுவதற்கான உரிமை அல்லது அதிகாரம் எதனையும் செல்லுறுத்துதல்;

(ஆ) நொடித்துப் போன கூட்டாளி ஒருவரின் சொத்துக்களைக் கைவரப் பெறுவதற்காக, மாகாணத் தலைநகரங்கள் நொடிப்புநிலைச் சட்டம், 1909இன்படி அல்லது மாநில நொடிப்புநிலைச் சட்டம், 1920இன்படி நொடித்துப் போனவரின் சொத்தாட்சியருக்குள்ள அல்லது வழக்குறு சொத்துப் பேணுநருக்குள்ள அல்லது நீதிமன்றத்திற்குள்ள அதிகாரங்கள். (1909) 5/1920

(4) இந்தப் பிரிவு—

(அ) இந்தச் சட்டம் அளாவுகிற, ஆட்சிநிலவரைகளின் தொழிலிடத்தைக் கொண்டிராத நிறுவங்களுக்கு அல்லது அந்த நிறுவங்களின் கூட்டாளிகளுக்கு அல்லது பிரிவு 56இன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை காரணமாக இந்த அத்தியாயம் பொருந்துறாத பகுதிகளில் அமைந்துள்ள மேற்சொல்லப்பட்ட ஆட்சி நிலவரைகளிலுள்ளவர்களின் தொழிலிடங்களுக்கு, அல்லது

15/1882 (ஆ) மாகாணத் தலைநகரங்களில், மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் சட்டம், 1882, பிரிவு 19இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வகையைச் சார்ந்ததல்லாததாய், அல்லது மாகாணத் தலைநகரங்களுக்கு வெளியே மாநிலச் சிறுவழக்கு நீதி

9/1887 மன்றங்கள் சட்டம், 1887இல் இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வகையைச் சார்ந்ததல்லாததாய் இருந்து, மதிப்பில் நூறு ரூபாய்க்கு மேற்படாத உரிமைவழக்கு அல்லது எதிரிடைக் கோரிக்கை எதற்கும், அல்லது நிறைவேற்றுகை நடவடிக்கை எதற்கும் அல்லது அத்தகைய உரிமைவழக்கு அல்லது கோரிக்கை எதற்கும் சார்வுறலாக உள்ள அல்லது அதிலிருந்து எழுகிற வேறு நடவடிக்கைக்குப்

பொருந்துறாது.

70. நபர் எவரும், பொய்யானது என்று தாம் தெரிந்திருக்கிற அல்லது உண்மையானது என்று தாம் நம்பிக்கை கொண்டிராத விவரங்களையோ அல்லது முழுமையானது அல்ல என்று தாம் தெரிந்திருக்கிற அல்லது முழுமையானது என்று தாம் நம்பிக்கை கொண்டிராத விவரங்களையோ கொண்டிருக்கும் இந்த அத்தியாயத்தின்படியான விவரவுரை, திருத்தவுரை, அறிவிப்பு அல்லது தகவல் எதனிலும் கையொப்பமிடுவாராயின், அவர் மூன்று மாதங்கள்வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார். பொய்யான விவரங்களை அளித்தால் தண்டனை.

71. (1) நிறுவங்களின் பதிவாளருக்கு அனுப்பப்படுகிற ஆவணங்களுடன் சேர்த்தனுப்புவதற்காக, நிறுவங்களின் பதிவாளரின் பாதுகாப்பில் உள்ள ஆவணங்களைப் பார்வையிடுவதற்காக, அல்லது நிறுவங்களின் பதிவேட்டிலிருந்து படிகளைப் பெறுவதற்காக, செலுத்தத்தக்க கட்டணங்களை வகுத்துரைக்கும் விதிகளை மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக வகுக்கலாம் : விதிகளை வகுப்பதற்கான அதிகாரம்.

வரம்புரையாக: அந்தக் கட்டணங்கள் முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மிகைவரைக் கட்டணங்களுக்கு மேற்படுதல் ஆகாது.

(2) மாநில அரசாங்கம்—

(அ) பிரிவு 58இன்படி அனுப்பப்படுகிற விவரவுரைக்காகவும் அதன் உண்மை உறுதி ஒப்புதலுக்காகவும் உள்ள படிவத்தை வகுத்துரைக்கிற,

(ஆ) பிரிவுகள் 60, 61, 62, 63 ஆகியவற்றின் படியான விவரவுரைகள், தகவல்கள், மற்றும் அறிவிப்புகள், வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் இருக்கவேண்டுமென வேண்டுறுத்துகிற மற்றும் அவற்றிற்கான படிவத்தை வகுத்துரைக்கிற,

(இ) நிறுவங்களுக்கான பதிவேட்டின் படிவத்தையும், அதில் நிறுவங்கள் தொடர்பான பதிவுகளைச் செய்ய வேண்டிய முறையையும், அத்தகைய பதிவுகளை அல்லது அவற்றில் செய்யப்பட்ட குறிப்புகளைத் திருத்தம் செய்ய வேண்டிய முறையையும் வகுத்துரைக்கிற,

(ஈ) பூசல்கள் எழுகிறபோது, பதிவாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறையை ஒழுங்குறுத்துகிற,

(உ) பதிவாளரால் பெறப்படும் ஆவணங்களைக் கோப்பில் வைப்பதை ஒழுங்குறுத்துகிற,

(ஊ) முதல்நிலை ஆவணங்களைப் பார்வையிடுவதற்கான வரைக் கட்டுகளை வகுத்துரைக்கிற,

(எ) படிகள் வழங்குவதை ஒழுங்குறுத்துகிற,

(ஏ) பதிவேடுகளையும் ஆவணங்களையும் எவ்வாறு பிரித்தகற்றுவது என்பதை ஒழுங்குறுத்துகிற,

(ஐ) நிறுவங்களின் பதிவேட்டிற்கான அட்டவணையை எவ்வாறு வைத்து வருதல் வேண்டும் என்பதற்கும், அதற்கான படிவம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் வகைசெய்கிற, மற்றும்

(ஒ) பொதுவாக, இந்த அத்தியாயத்தின் நோக்கங்களை நிறைவேற்றுகிற

விதிகளை வகுக்கலாம்.

(3) முன்னரே வெளியிடப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக் குட்பட்டு, இந்தப் பிரிவின்படியான விதிகள் அனைத்தும், வகுக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VIII

### துணைவுறலானவை

பொது அறிவிப்புக் கொடுக்கும் முறை.

72. இந்தச் சட்டத்தின்படியான ஒரு பொது அறிவிப்பு—

(அ) அது பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவத்திலிருந்து கூட்டாளி ஒருவர் விலகிக்கொள்ளுதல் அல்லது வெளியேற்றப்படுதல் தொடர்பானதாகவோ, பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவத்தின் கலைப்பு தொடர்பானதாகவோ, கூட்டாண்மையின் நலன் களைப் பெறுவதற்காக இளவராகச் சேர்க்கப்பட்டிருந்து உரிமைவயதடைகிற நபர் ஒருவர், பதிவுசெய்யப்பட்ட நிறுவத்தில் கூட்டாளியாக ஆவதா ஆகாமலிருப்பதா என்பதைத் தேர்ந்தெடுத்துக்கொள்வது தொடர்பானதாகவோ இருக்கு மிடத்து, பிரிவு 63இன்படி நிறுவங்களின் பதிவாளருக்கு அறிவிப்பு கொடுப்பதன் வாயிலாகவும், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடுவதன் வாயிலாகவும், மற்றும் எந்த நிறுவத்துடன் அது தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த நிறுவத்தின் தொழிலிடம் அல்லது அதன் தலைமைத் தொழிலிடம் அமைந்துள்ள மாவட்டத்தில் புழக்கத்திலிருக் கிறதும், நாட்டுமொழியிலுள்ளதுமான குறைந்தது ஒரு செய்தித்தாளிலாவது வெளியிடுவதன் வாயிலாகவும், மற்றும்

(ஆ) பிற நேர்வு எதிலும், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடு வதன் வாயிலாகவும், மற்றும் எந்த நிறுவத்துடன் அது தொடர்புடையதாயிருக்கிறதோ அந்த நிறுவத்தின் தொழிலிடம் அல்லது அதன் தலைமைத் தொழிலிடம் அமைந்துள்ள மாவட்டத்தில் புழக்கத்திலுள்ளதும், நாட்டுமொழியிலுள்ளதுமான ஒரு செய்தித்தாளிலாவது வெளியிடுவதன் வாயிலாகவும்

கொடுக்கப்படுவதாகும்.

73. சட்டம் 1/1938, பிரிவு 2இனாலும் இணைப்புப்பட்டியலினாலும் நீக்கறவு செய்யப்பட்டது.

காப்புரைகள்.

74. இந்தச் சட்டத்திலுள்ள எதுவும் அல்லது இதனால் செய்யப்பட்ட நீக்கறவு எதுவும்—

(அ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு, ஏற்கெனவே பெறப்பட்ட, வந்தடைந்த அல்லது ஏற்பட்ட உரிமை, உரிமைமூலம், உரித்தம், கடமைப்பாடு அல்லது பொறுப்படைவு எதனையும், அல்லது

(ஆ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு செய்யப்பட்ட அல்லது உட்படுத்தப்பட்ட உரிமை, உரிமைமூலம், உரித்தம், கடமைப்பாடு அல்லது பொறுப்படைவு பொறுத்த சட்டமுறையான நடவடிக்கை அல்லது தீர்வழி எதனையும், அல்லது

(இ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு செய்யப்பட்ட அல்லது உட்படுத்தப்பட்ட எதனையும், அல்லது

(ஈ) கூட்டாண்மை தொடர்பாக, இந்தச் சட்டத்தினால் தெரிநிலையாக நீக்கறவு செய்யப்படாத சட்டம் எதனையும், அல்லது

(உ) கூட்டாண்மை தொடர்பான நொடிப்புநிலை பற்றிய விதி எதனையும், அல்லது

(ஊ) இந்தச் சட்டத்திற்கு முரணாக இல்லாத சட்ட விதி எதனையும் பாதிப்பதில்லை; பாதிப்பதாகக் கொள்ளப்படுதலும் இல்லை.

## இணைப்புப்பட்டியல் I

### மிகைவரைக் கட்டணங்கள்

[பிரிவு 71இன் உட்பிரிவு (1)ஐப் பார்க்க]

| கட்டணம் செலுத்தப்பட வேண்டியதாக உள்ள ஆவணம் அல்லது நடவடிக்கை. | மிகைவரைக் கட்டணம். |
|---|---|
| (1) | (2) |
| பிரிவு 58இன்படியான விவரவுரை | பத்து ரூபாய். |
| பிரிவு 60இன்படியான விவரவுரை | மூன்று ரூபாய். |
| பிரிவு 61இன்படியான தகவலுரை | மூன்று ரூபாய். |
| பிரிவு 62இன்படியான தகவலுரை | மூன்று ரூபாய். |
| பிரிவு 63இன்படியான அறிவிப்பு | மூன்று ரூபாய். |
| பிரிவு 64இன்படியான விண்ணப்பம் | மூன்று ரூபாய். |
| பிரிவு 60இன் உட்பிரிவு (1)இன்படி நிறுவங்களில் பதிவேட்டைப் பார்வையிடுதல். | பதிவேட்டின் ஒரு தொகுதியைப் பார்வையிடுவதற்கு ஒரு ரூபாய். |
| பிரிவு 66இன் உட்பிரிவு (2)இன்படி நிறுவத்தின் தொடர்புடைய ஆவணங்களைப் பார்வையிடுதல். | ஒரு நிறுவம் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிடுவதற்கு ஒரு ரூபாய். |
| நிறுவங்களின் பதிவேட்டுப் படிகள் | ஒவ்வொரு நூறு சொற்களுக்கு அல்லது அதன் பகுதிக்கு நாற்பது காசுகள். |

## இணைப்புப்பட்டியல் II

[சட்டம் 1/1938ஆல் நீக்கறவு செய்யப்பட்டது.]